Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

போன: 389

தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 31 ஆம் நாள் துல்ஹஜ் 28 (13-6 61) செவ்வாய்க்கிழமை இதழ் 102

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்–2.

# இந்தியாவில் தயாராகும்

## சிங்கள படங்கள் இலங்கையில் திரையிட அனுமதி இல்லை

### படத் தயாரிப்பாளருக்கு மந்திரி அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

இந்தியாவில் தயாரிக்கப்படும் சிங்களத் திரைப்படங்களை இலங்கையில் காட்டுவதற்கு அனுமதிவழங்கப்படமாட்டாது. இது சம்பந்தமாக கைத்தொழில், கலாச்சார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா சகல தயாரிப்பாளருக்கும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் சிங்களப்படங்கள் மட்டுமின்றி, ஹிந்தியில் அல்லது தமிழிலிருந்து "டப்" செய்யப்படும் திரைப்படங்களையும்கூட இலங்கையில் பொதுமக்களுக்குக்காட்ட அனுமதிக்கப்படமாட்டாதென சகல தயாரிப்பாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 10,000 மோசடி

கொழும்பு, திங்கள்

கொழும்பு தாதிமார் பயிற்சிப் பாடசாலையின் கூட்டுறவு க்ஷேமநலச் சங்கத்தில் பத்தாயிரம் ரூபாய்க்குமதிகமான மோசடி நடைபெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## தெற்கு பாரசீகத்தில் பூகம்பம் ஒரு கிராமம் அழிந்தது

தெஹ்ரான், ஜூன் 12

தெற்கு பாரசீகத்தில் நேற்று சில நிமிடங்கள் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. பூமியதிர்ச்சியினுல் சுமார் 400 குடிசைகள் கொண்ட ஒரு கிராமமே அழிந்துவிட்டது.

மண்வீடுகள் விழுந்ததால் 50 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் சுமார் ஐம்பது பேர் காயமடைந்தனர். சுமார் ஆயிரத்துஐநூறு மக்கள் வீடுவாசல் இழந்து திறந்த வெளிகளில் அகதிகளாக நிற்கின்றனர். இவர்களுக்கு விமானங்களிலிருந்து உணவு வழங்கப்பட்டன. தரை மார்க்கமாகவும் நிவாரண உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## ஊறுகொடவத்தையில் மத்திய தொழில்முறை பயிற்சி நிலையம்

### 5 போதனுசிரியர்கள் பம்பாயில் பயிற்சி பெறுவர்

கொழும்பு, திங்கள்

ஊறுகொடவத்தையில் மத்திய தொழில் முறை பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்காக 5 போதனுசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் பம்பாயில் 5 மாத காலம் விசேஷ பயிற்சி பெறுவார்கள். சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்திலிருந்து ஒரு நிபுணரும் இங்குவந்து பயிற்சியளிப்பார். தொழில்கந்தோரைச் சேர்ந்த திரு. வேலாயுதபிள்ளை அவரின்கீழ் பயிற்சிபெறுவார்.

## துணிகளை கடத்திச் சென்ற கடற்படையினர் கைது

கொழும்பு, திங்கள்

இன்று காலை கொச்சிக்கடைக்குச் சமீபத்திலுள்ள கடற்படை முகாமில், கடற்படைப் பகுதியைச் சேர்ந்த சில கடற்படைவீரர் கொழும்புத் துறைமுகத்திலிருந்து 4 பேல் துணிகளைக் கடத்திச்செல்ல முயன்றபோது, கடற்படை வாலண்டியர் ரிசர்வ் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட கடற்படை வீரர்களை வாலண்டியர் படையினர் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

## ஆஸி–இங்கிலாந்து கிரிக்கெட்

பிரிஸ்பேன் ஜூன் 12

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில். இங்கிலாந்து 2வது இன்னிங்ஸில் 1 விக்கட் நஷ்டத்திற்கு 106 ரன்கள் எடுத்திருந்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதாஞல். இங்கிலாந்து இன்னும் 215 ரன்கள் எடுத்தாகவேண்டும். ராமன் சுப்பராவ் 68 ரன்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் விளையாடிக்கொண்டிருக்கிருர்.

முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 9 விக்கெட் நஷ்டத்திற்கு 516 ரன்கள் எடுத்தது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 195 ரன்கள் டுத்திருந்தது.

## தொழிற்சாலை ஆரம்பிப்பர்வகள் தொழிற் கந்தோருக்கு அறிவிக்கவேண்டும்

### தவறினுல் குற்றம் ரூ. 200 செலுத்த வேண்டும்

கொழும்பு, திங்கள்

புதிதாகத் தொழிற்சாலையை ஆரம்பிக்க விரும்பும் எவரும் இனிமேல் ஒருமாதத்துக்கு முன்னரே தாம் ஆரம்பிக்க இருக்கும் தொழிற்சாலை பற்றிய முழு விபரங்களையும் தொழிற்கந்தோருக்குத் தெரிவிக்கவேண்டும். இந்தப் புது விதியை மீறுபவர்கள் ரூ 2-00 வரை அபராதம் செலுத்த வேண்டிவரும்.

இருபதுவருடமாகத் தொடர்ந்து இருந்துவந்த தொழிற்சாலைச் சட்டத்தில் ஏற்படுத்த இருக்கும் ஒரு புதிய திருத்த மசோதாவால் மேற்படி விதி அமுலுக்குவரும்.

இம்மசோதா அடுத்தவாரம் பார்லிமெண்டில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## தெங்கு சபைக்கு 12 பேர் நியமனம்

கொழும்பு, திங்கள்

உணவு, வர்த்தக, கப்பல் போக்குவரத்து மந்திரி திரு டி. பி. இலங்கரத்ன இலங்கை தெங்குபொருள்சபைக்கு12அங்கத்தவர்களை நியமித்துள்ளார்.

சென்றவாரம் ராஜினமாச் செய்த சபை அங்கத்தவர்களைத் தோந்தெடுத்த முறையைப் பின்பற்ருது இத்துறையின் சகல பகுதிகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளே தற்போதுள்ள சபையில் அங்கத்துவம் வகிக்கின்ருர்கள்.

## 'கழிவுத் தாள் இறக்குமதியை தடைசெய்க'

இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் கழிவுத்தாள்களை நிறுத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டும் என்று வர்த்தக சபை ஒன்று கருத்து தெரிவித்திருக்கிறது.

கழிவுத் தாள்களை இறக்குமதி செய்வதின் மூலம், இலங்கை வருடம் தோறும் ரூ. 3 கோடி செலவழிக்கிறது என்றும் இவ் வர்த்தக சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## தடுப்புக்காவலில் இருந்தவர்

### பொலிஸ் காவலில் வைக்கப்பட்டார்

#### மன்னுர் நிலைமைபற்றி திரு. பீலிக்ஸ் அறிக்கை

கொழும்பு, திங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுவாக அமைதி நிலவுகிறது என பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தகவல்பகுதி மூலம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிருர்.

மன்னுரில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் பொலிஸ்காவலில் வைக்கப்பட்டிருக்கிருர் என்றும் அவரது அறிக்கை கூறுகிறது.

## பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் அமெரிக்கா செல்வார்

கோவை, ஜூன் 12

தமிழ் நாடு பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பி. எஸ். சின்னத்துரை அமெரிக்காவில் இரண்டுமாதகாலம் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக அடுத்த மாதம் முதல் வாரத்தில் இங்கிருந்து புறப்படுவார்.

## 10,040 பட்டதாரிகள் கேரளத்தில் வேலையின்றி இருக்கின்றனர்

திருவனந்தபுரம், ஜூன் 12

கேரள ராஜ்யத்தில் படித்தும் வேலையற்றிருப்போர் தொகை 65,800 என்று கேரள ராஜ்ய தொழில் மந்திரி திரு. கே. ஸி. அச்சுதன் இன்று சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

இவர்களில் பத்தாயிரத்து நாற்பதுபேர் பட்டதாரிகள் என்று மந்திரி தெரிவித்தார்.

## இந்தியாவில் சர்வதேச சினிமா பட விழா

புதுடில்லி, ஜூன் 12

வருகிற அக்டோபர் 27-ம் தேதி புதுடில்லியில் நடைபெற இருக்கும் சர்வதேச சினிமாப் பட விழாவில் 18 நாடுகள் பங்குபற்றிக்கொள்ளச் சம்மதித்திருக்கின்றன. மேலும் பல நாடுகளும் இவ்விழாவில் பங்குபற்றிக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சுப்ரீம்கோர்ட்

யாழ்ப்பாணம், திங்கள்

சுப்ரீம்கோர்ட் வருகிற ஜூலை 3ம் தேதி, இரண்டாம் முறையாக யாழ்ப்பாண நகரமண்டபத்தில் ஆரம்பமாகும்.

**Chankanai Co-op. Clay Workes Reconstiuction Society Limited, Chankanai.**

**சங்கானை ஐக்கிய மட்கல அபிவிருத்திச் சங்கம் சங்கானை.**

## தேவை

சங்கானை ஐக்கிய மட்கல அபி விருத்திச் சங்கத்திற்கு கீழ் கண்ட உத்தியோகஸ்தர்கள் தேவையாயிருப்பதால், உடன், கீழ்க் குறிக்கப்பட்ட விலாசத் துக்கு மனுப்பண்ணவும்.

நிபந்தனைகள்

**மனேஜர்**

வயது 25க்கும் 45க்கும் இடையில்.

தராதரம்: - கூட்டுறவு பாடசாலை தராதரப்பத்திரம் பெற்றவர்.

2. கூட்டுறவுச் சங்க நடைமுறைகளில் அனுபவம் பெற்றவர்.

3. நற்சாட்சிப் பத்திரம்- (3) மூன்று. ஒன்று பகுதிக் காரியாதிகாரியிடமிருந்து.

பிணை: ரூ. 1000-00 ஆதனம், 500-00 ரொக்கம்.

சம்பளம்: உதவிப் பணம் உட்பட ரூ. 100/- நிலையானது (fixed).

குறிப்பு: தொழிலாளர் சேம நிதிப் பணம் 6% கொடுக்கப் படும்.

**விற்பனையாளர்**

1. வயது 25—45.
2. நற்சாட்சிப்பத்திரம்- 3. ஒன்று காரியாதிகாரியிடமிருந்து,
3. கூட்டுறவுச்சங்க அனுபவமுடையவர்.
4. சம்பளம் - ரூபாய் 80/-
5. பிணை ரூபாய் 500/-ரொக்கம்,

தொழிலாளர் சேம நிதிப் பணம் 6% சங்கத்தினல் கட்டப்படும்.

**உதவி விற்பனையாளர்**

1. வயது 25-45.
2. நற்சாட்சிப்பத்திரம் -3 ஒன்று கிராம விதானையிடமிருந்து,
3. மட்கலப் பொருட்களில் அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.
4. சம்பளம் ரூ. 80/

தொழிலாளர் சேமநிதி கட்டப்படும்:

**வாகன (Lorry) சாரதி**

வயது 22—45

சம்பளம் ரூபாய்125-00 (சகல உதவிப்பணம் உட்பட) (Batta-Overtime)

தொழிலாளர் சேமநிதி 6% கட்டப்படும்.

நற்சாட்சிப்பத்திரம் 3. ஒன்று காரியாதிகாரியிடமிருந்து.

பிணை ரொக்கம் 500-00.

**வாகன உதவியாளர் (Lorry Cleaner)**

1. வயது 22-45.
2. நற்சாட்சிப்பத்திரம் (3) ஒன்று கிராம விதானையிடமிருந்து.
3. சம்பளம் ரூபாய் 100-00 சகல உதவிப் பணம். (Batta-Overtime)

தொழிலாளர் சேமநிதி 6% சங்கத்தினல் கட்டப்படும்.

20-6-61க்கு முன் மனுப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

காரியதரிசி
சங்கானை ஐக்கிய மட்கல அபிவிருத்திச் சங்கம், சங்கானை

## விற்பனைக்கு

லொறி: புதிய மொறிஸ் கொமர்ஸல் (Morris Commerical) டீஸல் என்ஜின் 1 1/2 டன். மிகத் திறமையானமுறையில் அமைக்கப்பட்ட (Boddy) போடி"யும்உடையது. விபரங்களுக்கு: யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாஜம், வல்வெட்டித்துறை.

# கல்லோயாவில் சீனி ஆலை வேலை மந்தம்

## மதுபானம், 'காட்போட்' தொழிற்சாலை நிறுவ ஏற்பாடு

அம்பாரை, திங்கள்

சென்ற ஜூன்மாதம் முதலாம் தேதி தீர்மானித்தபடி கல்லோயா சீனி ஆலை வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. கரும்பை வெட்டுவதற்கு அமர்த்தப்பட்ட ராணுவத்தினர் எதிர்பார்த்ததையும்விட குறைவாக கரும்பை அறுவடைசெய்திருப்பதனல் சீனி உற்பத்தி வேலைகளைத் துரிதமாகக் கவனிக்க முடியவில்லை என்று ஸ்தல மனேஜர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறர். அறுவடையில் ஈடுபட்டிருக்கும் ராணுவத்தினர் உற்பத்திக்குத் தேவையான கரும்பை அறுவடை செய்யப் பழக்கப்பட்டவுடன் ஏற்கனவே திட்டமிட்டபடி சீனி ஆலை உற்பத்தியைப் பெருக்க முடியுமென்று தெரிகிறது.

2,500 ஏக்கர் கரும்புச் செய்கை நிலத்திலிருந்து 4,500 தொன் எடையுள்ள சீனியை ஆலையிலிருந்து உற்பத்திசெய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு தொன் எடையுள்ள சீனியை உற்பத்தி செய்வதற்கு ரூ. 550 செலவாகும்.

**மதுபானம் வடிசெய்யும் ஆலை**

பிரெஞ்சு கம்பெனி ஒன்று நிர்மாணித்துக் கொண்டிருக்கும் மதுபான ஆலைக்கான வேலைகள் முடியும் கட்டத்தில் உள்ளன. மது ஆலைக்கு வேண்டிய வேலைகள் முடிந்ததும் மது அடைப்பதற்கு வேண்டிய புட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை கல்லோயாவில் நிறுவப்படும்.

கரும்புச்சக்கையிலிருந்து 'கார்ட்போட்' மட்டைகள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையையும் கல்லோயா சபை நிறுவ இருக்கிறது. இது அரசாங்கத்தின் வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்தக்கூடியதாக இருக்கும். இந்தத் தொழிற்சாலைகளில் கிட்டத்தட்ட 1000 தொழிலாளருக்கு வேலை கரும்புத் தோட்டத்தலும் 6000 தொழிலாளருக்கு வேலை கிடைக்குமென்று தெரிகிறது.

## பங்களூர் கடிகாரம்

### அடுத்த மாதம் விற்பனைக்கு வரும்

பங்களூர், ஜூன் 12

பங்களூரில் அரசாங்க இந்துஸ்தான தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் கடிகாரங்கள் முதல் தடவையாக அடுத்த மாதம் விற்பனைக்குவருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலையில் 1960-61-ம் வருடத்தில் உற்பத்தி இரண்டரை மடங்கு அதிகரித்துள்ளதென்றும் இலாபமும் இரண்டரை மடங்கு அதிகரித்துள்ளதென்றும் அறிவிக்கப்படுகிறது.

தொழிற்சாலையின் வருமானத்தில் ஒருபங்கை மூலதனமாகக் கொண்டு மற்றொரு தொழிற்சாலை அமைக்கப்படுவதாகவும் இத்தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் இயந்திர சாதனங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்இயந்திர சாதனங்களின் தரத்துக்கு ஒப்பிக்கக் கூடியனவாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய கம்பனியொன்றுடன்விரைவில் அங்குமற்றொரு கடிகார உற்பத்தி நிலையம்ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

## ஏலத்தில் யானைக்குட்டி!

அனுரதபுரம், திங்கள்

சமீபத்தில், யோடா எல என்ற, ஆற்றில் மூழ்கும் தறுவாயில் காப்பாற்றப்பட்ட யானைக்குட்டி ரூ.775 க்கு விற்பனையானது.

இந்தக் குட்டியானையைபலாளாவைச்சேர்ந்த திரு. ராஜ ஜயக்கொடி வாங்கினர்.

### தேவை

நேர்மையும், கண்ணியமும் கல்வியறிவுமுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்து இலங்கையடங்கிலும் பிரதிநிதிகளாகவும், பரிசோதகர்களாவும் கடமையாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஈழமாதா பெனிவிற் கோப்பரேஷன், 41, மேல்மாடி, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**றப்பர் ஸ்டாம்புகள்**

றப்பர் ஸ்டாம்பு வேலைகள் மிகத்திறமான முறையில் ஒரு நாள் தவணையில் செய்து கொடுக்கப்படும் - கலாஜோதி கைத்தொழில், 141, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**றேடியோ**

உங்கள் றேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, றேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## பல இடங்களிலும் சுகாதாரவார விழா

தெல்லிப்பழை

சுகாதார பரிசோதகருடைய பகுதியில், இம்மாதம் 5-ம் திகதி முதல் 11-ம் திகதிவரை மாணவர்கள், குழந்தைகள், உட்பட எல்லோருமே, சுகாதார விழாவைக் கொண்டாடினர்கள். சுகாதார வாரத்தில் முதல் நாளில் மாணவர் ஊர்வலமும், இரண்டாம் நாளில் குழந்தைகள் போட்டியும், மூன்றும் நாளில் பால்வாரமும் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

⁂

முள்ளியவளை,

மன்னர், வவுனியா, முல்லைத்தீவு பகுதிச் சுகாதாரக் கல்வியாளர் திரு. எஸ். பொன்னம்பலம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட சுகாதாரவாரக் கொண்டாட்டங்கள் கடந்த ஆண்டுகளைவிட மிக அமைதியான முறையில் நடைபெற்றது.

⁂

மன்னர்.

இந்துக் கல்லூரியில் மன்னர் சுகாதார வைத்திய அதிகாரி கே. சோமசுந்தரம்பிள்ளை ஆதரவுடன் சுகாதாரவிழாக் கொண்டாட்டங்கள் சிறந்த முறையில் நடைபெற்றன. மாணவர்களின் நாடகங்கள், பாட்டுக்கள், சொற்பொழிவுகள், முதலியன இச்சுகாதார விழாவில் இடம்பெற்றன.

## லளித கலைக்கல்லூரி

### கல்வி மந்திரி கேட்கிறர்

கொழும்பு, திங்கள்

லளித கலைக் கல்லூரியைத் தனது அமைச்சின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கல்வி வானெலி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் கேட்டுள்ளார்.

இப்பொழுது லளித கலைக் கல்லூரி கைத்தொழில் கலாசாரவிவகார அமைச்சின் கீழுள்ளது. கலாசாரவிவகார அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயகாவுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்திலேயே லளித கலைக் கல்லூரியை தமது அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு விருப்பம் தெரிவிதுள்ளார்.

## பெண்ணைக் கொலை செய்ய எத்தனித்தாரம்

### எதிரிக்கு 2 வருடச் சிறை

கொழும்பு, திங்கள்

பேத்தியகொடையைச் சேர்ந்த நாராயணன் என்பவரின் மகன் டி. நாடார் என்பவருக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஜனப் எம். எ. எம். ஹுசெயின் இரண்டுவருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தார்.

பேத்தியகொடையைச் சேர்ந்த சுப்பையா மாரிமுத்து என்பவரின் மனைவி லட்சுமியைக் கொலை செய்ய எத்தனித்ததாகவும் செல்வம் என்ற மற்றொரு பெண்ணுக்குக் காயம் விளைத்ததாகவும் நாடார் மீது குற்றம் சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

# பருத்தித்துறையில் மீண்டும் எறிகுண்டு வீச்சு

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறையில் இம்மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற எறிகுண்டு வீச்சுச் சம்பவத்தின் பின் மீண்டும் ஓர் எறிகுண்டு வீச்சுச் சம்பவம் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

இச்சமயம் கிட்டங்கிச் சுவர் ஒன்றின் எறிகுண்டு வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் சவரத் தொழிலாளி ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கைத்தொழில் அபிவிருத்தி ரூ. 8 கோடி செலவிடப்படும்

கொழும்பு, திங்கள்

அரசாங்கத்தின் கைத்தொழில் திட்டங்களுக்காக அடுத்த நிதி வருடத்தில் கைத்தொழில் அமைச்சு சுமார் 8 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்துள்ளது.

சிமெந்து, துணி, இரும்பு, உருக்கு, ரப்பர், ரியூப் ஆகியவைகளின் உற்பத்திக்கே முதலிடம் கொடுக்கப்படும்.

கைத்தொழில் அமைச்சின் உத்தேச செலவு திட்டம் பற்றி சென்ற வார திறைசேரி ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவுகள் யாவும் திறைசேரியினல் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

கைத்தொழில் அமைச்சின் உத்தேச செலவுத்திட்டம் பற்றி திறைசேரி பரிசீலனை செய்தபொழுது அபிவிருத்தித் திட்ட இலாகா அதிகாரிகளும் கைத்தொழில் அமைச்சு அதிகாரிகளும் சமூகமாயிருந்தனர்.

## விவசாயப் பயிற்சி கியூபா இளைஞர் ரஷ்யா பயணம்

ஹவானு, ஜூன் 12

சோவியத் யூனியனில் விவசாயத்தில் ஓராண்டு காலப்பயிற்சி பெறுவதற்காக கியூபா நாட்டின் ஆயிரம் இளம் விவசாயிகள் இன்று சோவியத் யூனியனுக்குப் பிரயாணமானுர்கள்.




கண் சம்பந்தமான வியாதியினல் கஷ்டப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களின் துயரை நீக்கி அவர்களின் நல்-வாழ்த்துக்களைப் பெற்றுள்ளோம். ஒரு முறை கலந்தாலோசியுங்கள்!

**மு.க.ஜெகநாதன்**

யூனனி கண் வைத்தியநிபுணர்
பெரியகடை.... யாழ்ப்பாணம்

## தெய்வ வழிபாட்டிற்கும்

உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

**33
303 ஊதுபத்திகளை
3003**

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:

**ஜெகஜோதி அன் கோ.**
குருதெனிய.

# ஒரிஸா தேர்தல் முடிந்தது -காங்கிரசுக்குபூரண பெரும்பான்மை பலம்

## காங்கிரஸ்-82-பரிஷத் -37 கம்யூ-4

புதுடில்லி, ஜூன் 12

140 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரிஸ்ஸா சட்டசபைக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பூரண பெரும்பான்மைப் பலம் பெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு 82 ஸ்தானங்களும், கண தந்திர பரிஷாத் கட்சிக்கு 37 ஸ்தானங்களும் கிடைத்துள்ளன. பிரஜாசோஷலிஸ்ட் கட்சி 10 ஸ்தானங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 3 ஸ்தானங்களையும் பெற்றுள்ளன. சுயேச்சையாளர் ஏழுபேர் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் சட்டசபைத் தேர்தலில் இவ்வளவு பெரும்பான்மைப் பலத்துடன் தனி ஒரு கட்சி தெரிவு செய்யப் பெற்றது இதுதான் முதல் தடவை. 1952-ம் வருடம் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் 67 ஸ்தானங்களைப்பெற்றது. 1957-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 56 ஸ்தானங்களே கிடைத்தன.

இந்த இடைத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு படுதோல்வி கிடைத்துள்ளது. பழையசட்டசபையில் ஐந்து ஸ்தானங்களைக் கொண்டிருந்த ஜார்கண்ட் கட்சியினர் இம்முறை தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டும் ஒருவர்கூட வெற்றியீட்டவில்லை. இத்தேர்தலில் நான்கு பெண்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியும், கண தந்திர பரிஷத்கட்சியும் கூட்டாக அரசாங்கம் அமைத்து ஆட்சிசெய்துவந்தன. இருகட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பிளவுகாரணமாக கலப்பு அரசாங்கம் ராஜினமாச்செய்தது. இதன் பின்னர் ஒரிஸ்ஸாவில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

வெற்றி பெற்ற ஏழு சுயேச்சையாளர்களில் ஒருவர்லோகியாவின் சோஷலிஸ்ட் கட்சியையும் மற்றொருவர் ராஜாஜியின் சுதந்திரக் கட்சியையும் சேர்ந்தவர்கள்.

### 'பரந்த நோக்கம் வேண்டும்'

நேரு செய்தி

புதுடில்லி, ஜூன் 10

இந்திய முஸ்லிம்கள் மகாநாட்டுக்குப் பிரதமர் நேரு அனுப்பிய செய்தியில் 'பல்வேறு கோரிக்கைகளை எழுப்புவதுடன் மகாநாடு நின்றுவிடாமல் பரந்த நோக்கம் கொள்ளும் என்று தாம் நம்புவதாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னேற்றமடைய முஸ்லிம்களுக்கும் மற்றச் சிறுபான்மையினருக்கும் முழு வாய்ப்புகளையளிக்க நாம் பாடுபட வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

அவர்கள் வளர்ச்சியடைவதில் இடைஞ்சல் இருந்தால் அது நீக்கப்பட வேண்டும். ஆனல் அந்த நோக்கங்கள் இந்தியாவின் ஒற்றுமைக்கும் மதப்பற்றில்லா ஆட்சி முறைககும் உகந்ததாக இருக்கவேண்டும்

### ஜெனிவா மகாநாடு தோல்வியுற்ருல் ஆபத்து

—ஹோம்பிரபு

லண்டன், ஜூன் 11

ஜெனிவா மகாநாடு தோல்வியுற்று, லாவோஸில் மீண்டும் போர் தொடங்குமானல் அதன் விளைவு ஆபத்தாய் இருக்குமென பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஹோம்பிரபு கூறினர். சோவியத் அயல்நாட்டு மந்திரி திரு. குரோமிகோவைச் சந்திக்கும் பொருட்டு அவர் லண்டனிலிருந்து ஜெனிவா புறப்பட்டார்.

### "ரஷ்யா அனைத்தும் செய்யும்"

மாஸ்கோ, ஜூன் 11

ஜனதிபதி கென்னடிக்கும் திரு. குருஷேவுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை நடைமுறைக்குக்கொண்டுவர சோவியத்யூனியன் தன்னல் இயன்ற அனைத்தையும் செய்யும் என ரஷ்ய ஜனதிபதி இங்கு ஒரு விருந்தில் கூறினர்.



காங்கோவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால் வறுமைப்பிணியால் கஷ்டப்படும் பெருந்தொகையான காங்கோலிய குழந்தைகளில் இப்படத்தில் காணப்படும் குழந்தையும் ஒன்று. காங்கோவில் பக்வாங்கா என்ற இடத்தில் ஐ. நா. பஞ்ச நிவாரண நிலையத்தின்முன் உணவுக்காக இக்குழந்தை கையேந்தி நிற்கின்றது.

# அங்கோலா-துருப்புக்கள் மேலும் குவிக்கப்படுகின்றன

## தேசியத் தலைவர்கள் கைது

லண்டன், ஜூன் 12

அங்கோலாவுக்கு மேலும் இரண்டாயிரம் துருப்புகள் நேற்று லிஸ்பனிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டன. மேலும் துருப்புகளை அங்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் நடப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வட அங்கோலாவில் பல தேசியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள் என அறிவிக்கப்படுகிறது. அங்கு நடைபெற்ற புதிய தாக்குதலைத் தொடர்ந்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று சாந்தாகுரூஸ் என்ற கிராமத்தைத் தேசியவாதிகள் தாக்கினர்கள். போர்த்துக்கல் துருப்புக்கள் வர இயலாமல் ஒரு பாலத்தையும் அவர்கள் தகர்த்தனர். தலைநகர் லுவண்டாவிலிருந்து 15 மைல் தூரத்தில் துருப்புக்கள் தாக்கப்பட்டன. போர்த்துக்கலின் அடக்குமுறை காரணமாய் அந்நாட்டிற்குக் கேடு காலம் பிடித்திருப்பதாய் "நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகை கூறியுள்ளது.

### சிக்கிம் பிரஜாவுரிமை

புதுடில்லி, ஜூன் 12

சிக்கிம் நாட்டின் பிரஜாவுரிமை பற்றியவிதிகள் திருத்தப் பட்டுள்ளன. சிக்கிம் நாட்டில் தொடர்ந்து 15 வருடங்கள் வசித்துவந்தவருக்கு பிரஜாவுரிமை வழங்கப்படும். இதுவரை தொடர்ந்து 15 வருடங்கள் வசித்து வந்தாலும் நிலவுடமை பெற்றவர்களே பிரஜாவுரிமை பெறக் கூடியதாக இருந்து வந்தது.

### எம். ஜி. ஆர். ராஜினமா

சென்னை, ஜூன் 11

தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சபையிலிருந்து எம். ஜி. ராமச்சந்திரன் ராஜினமாச் செய்துவிட்டார்.

படங்கள் தணிக்கை சபையார் முன் தணிக்கைக்குப் போகுமுன்னர் ஒருமுறை திரைப்படத் தயாரிப்பாளர் சபையினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட சுய தணிக்கை கமிட்டி! முன்பு போட்டுக்காட்டி தணிக்கை செய்ய வேண்டுமென்ற எம். ஜி. ஆரின் யோசனைப்படி ஒரு கமிட்டியைத் தேர்தெடுக்க சபை கூடியபோது ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாகவே எம். ஜி. ஆர். ராஜினமாச் செய்துள்ளதாகத் தெரிகிறது.

சபைத் தலைவர் அவருடைய ராஜினமாவை ஏற்காமல் வாபஸ் பெறுமாறு வற்புறுத்தி வருகிருராம்.

### ரூ. 45 லட்சம் செலவில் நூற்பு ஆலை

திரு. சாஸ்திரி அடிக்கல் நாட்டினர்.

சேலம், ஜூன்11

ரூ. 45 லட்சம் செலவில் நிறுவப்படவிருக்கும் சேலம் கூட்டுறவு நூற்பு ஆலைக்கு யூனியன் உள்துறை மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி அடிக்கல் நாட்டி வைத்துப் பேசுகையில் "நம் நாட்டில் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் உண்ண உணவு, உடுக்க உடை தங்க இடம் ஆகியவை மக்களுக்கு இன்றியமையாத தேவைகள் என்பதை மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் பூரணமாக உணர்ந்துள்ளனர் என்று கூறினர்.

### ஸான்ஸிபார்:

64 பேர் பலி

லண்டன், ஜூன் 12

ஸான்ஸிபார் கலகத்தில் இதுவரை 64 பேருக்கு மேலானேர் பலியாகியிருப்பதாயும், 900 க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

# கிழக்கு ஜெர்மனி-ரஷ்யா உத்தேச ஒப்பந்தம்

## மேற்கு ஜெர்மன் அதிபர் எதிர்ப்பு

பொன், ஜூன் 12

கிழக்கு ஜெர்மனியுடன் சோவியத் யூனியன் தனிப்பட்ட முறையில் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை மேற்கு ஜெர்மனி அனுமதிக்க மாட்டாது" என்று மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் அடினர் அறிவித்துள்ளார்.

ஜெர்மன் பிரச்னைக்கு ஒரு முடிவுகாண்பதற்கு மேற்குநாடுகள் ஒத்துவராவிட்டால் கிழக்கு ஜெர்மனியுடன் ரஷ்யா ஒரு ஒப் ந்தம் செய்துகொள்ளுமென்று சோவியத் பிரதமர் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

இதுபற்றி டாக்டர் அடினர் குறிப்பிடுகையில் சோவியத் யூனியனின் இந்த ஒப்பந்த முயற்சி ஜெர்மனியை நிரந்தரமாகப் பிரித்துவைக்கவே வழி செய்யுமென்ருர்.

ஜெர்மன் மக்கள் ஐக்கிய ஜெர்மனியையும் சுதந்திர வாழ்க்கையையுமே விரும்புகிருர்களென்று டாக்டர் அடினர் கூறினர்.

கிழக்கு மேற்கு ஜெர்மனிகளின் ஐக்கியம்பற்றியும் அணு ஆயுத பரிசோதனைத் தடை பற்றியும் சோவியத் பிரதமர் குருசேவ் அமெரிக்க ஜனதிபதி கென்னடியிடம் சமர்ப்பித்த குறிப்புகள் பற்றி அமெரிக்கா இன்னும் பரிசிலனை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

இந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளில் புதிதாக எதுவுமில்லையென்று மாஸ்கோவிலுள்ள மேற்குநாடுகளின் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

லாவோஸ் சம்பந்தமாக ஜெனிவாவில் நடைபெறும் மகாநாடும் அணு ஆயுதப் பரீட்சைத் தடைசம்பந்தமாக ஜெனிவாவில் நடைபெறும் மகாநாடும் எவ்வித பயனைக் கொடுக்கின்றன வென்பதைப் பார்த்தே ரஷ்யாவுடன் மற்ருெரு மகாநாட்டில் கலந்துகொள்வதில் அர்த்தமுண்டு என்று ஜெனிவா மகாநாடுகளில் கலந்துகொள்ளும் அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா

### துறைமுக வேலைநிறுத்த நோட்டீஸ் வாபஸ்

புதுடில்லி, ஜூன் 11

பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய துறைமுகங்களில் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக துறைமுகத் தொழிலாளர்கள் கொடுத்திருந்த நோட்டீஸ் இன்று வாபஸ்பெறப்பட்டது. 3 தரப்பு பிரதிநிதிகளும் ஒரு மகாநாட்டில்கூடி விவாதித்ததைத் தொடர்ந்து வேலைநிறுத்த யோசனை வாபஸ் பெறப்பட்டது. அரசாங்கம், யூனியன், துறைமுக டிரஸ்ட் ஜெனரல் மனேஜர் ஆகியோருக்கிடையே இம் மாநாடு நடைபெற்றது.

# ஜெனிவா மகாநாடுமீண்டும்கூடுகிறது

## குரோமிக்கோ-ஹியூம்பிரபு சந்திப்பின் பலன்

ஜெனிவா, ஜூன் 12

லாவோசில் இடதுசாரிகளான பதட் லாவோஸ் படையினர் சண்டை நிறுத்த உடன்பாட்டை மீறி வலதுசாரியினரின் பிரதேசமான ஜார்ஸ் பகுதியில் படோங் என்ற இடத்தைக் கைப்பற்றிவிட்டதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து ரத்துச்செய்யப்பட்டிருந்த லவோசுக்கான 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக் கமிஷனின் மகாநாடு இன்று மீண்டும் கூடுமென பிரிட்டிஷ் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

லாவோசில் பதட் லாவோ படையினர் சண்டைநிறுத்த உடன்பாட்டை மீறியதாக வெளிவந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து சர்வதேசக் கமிஷனின் ஜெனிவா மகாநாடு முறிந்துபோகுமோ என்ற அச்சம் உலக நாடுகள் பலவற்றிலும் ஏற்பட்டது. மகாநாடு முறிந்து போகாமல் காப்பாற்றுவதற்கு பல்வேறு தரப்பினரும் குறிப்பாக இந்திய தலைமைப் பிரதிநிதி திரு. கிருஷ்ணமேனன் தீவிர முயற்சி செய்தனர்.

வியன்னவில் கென்னடி—குருசேவ் சந்திப்பின் போது அமெரிக்க வெளிவிவகார மந்திரி டீன்றஸ்க்குடன் பேச்சுவார்த்தை நடத்திய லாவோஸ் சர்வதேசக் கமிஷனின் கூட்டுத் தலைவர்களில் ஒருவரான சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோ மாஸ்கோவிலிருந்து ஜெனிவா வந்து சேர்ந்தார்.

ஜெனிவா வந்து சேர்ந்த திரு. குரோமிகோவை சந்தித்துப் பேசுவதற்காக கமிஷனின் மற்ருெரு தலைவரான பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம் பிரபு நேற்று ஜெனிவா வந்து சேர்ந்தார்.

ஹியூம் பிரபுவும் திரு. குரோமிக்கோவும் நேற்று சுமார் 50 நிமிஷ நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப் பேச்சுவார்த்தைக்குப் பின், "நெருக்கடி தீர்ந்தபாடில்லை. ஆனல் எதுவிதத்திலும் நிலைமையைச் சமாளித்துத்தானகவேண்டும்" என்று கூறினர். தங்கள் பேச்சுவார்த்தைகள் நல்ல பயனுள்ளதாக இருந்தனவென்று ஹியூம் பிரபு தெரிவித்தார்.

திரு. குரோமிக்கோ ஜெனிவா வந்து சேர்ந்ததும் இந்திய தலைமைப் பிரதிநிதி திரு. வி. கே. மேனன் திரு. குரோமிக்கோவைச் சந்தித்துப் பேசினர்.

இதன் பின் திரு. மேனன் கம்போடிய பிரதமர் இளவரசர் திரு. நொரடம் சிகானுக்கைச் சந்திபபதற்காக பிரான்

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

பூரணமான சாந்தியும் பேரின்பமும் பகவானிடத்து மட்டும் பெறக் கூடியன. நீ, அவரை உனது உண்மையான தந்தையாக உணரும் போது அவர் உன்னைத் தமது சொந்தக் குழந்தையாக ஏற்றுக்கொள்ள அப்போது தயாராய்யுள்ளார்.

—சுவாமி ராமகிருஷ்ண நந்தா


ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம பிலவ ஆண்டு வைகாசி மீ 31உ (13-6-61)

EELA NADU: National Tami Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## கிருமி நாசினியால் மனிதருக்கு ஆபத்து

ஒருவகை கிருமி நாசினி காரணமாக யாழ்ப்பாணத்தில் மட்டும் 18 மாதங்களுக்குள்ளாக 59 பேர் மாண்டிருப்பதாகவும் ஆகவே இதை உபயோகிப்பதில் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் கூறி யாழ்ப்பாணம பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் வேதநாயகம், மக்களுக்கு ஒரு முக்கியமான எச்சரிக்கை செய்கின்றார். பொது மக்கள் தங்கள் நன்மையை முன்னிட்டாயினும் இவ்விஷயத்தில் அதிக கவனமாக இருக்க வேண்டும்.

கிருமி நாசினியைச் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்பவர் விஷயம் ஒருபுறமிருக்க, புகையிலை முதலிய பயிர்களைப் பாதுகாக்க, அதனைப் பாவிப்பவர்கள், கவலையீனமாக இருப்பதால் பல நோய்களுக்கு உள்ளாவதுடன், உயிருக்கும் கூட ஆபத்து ஏற்பட்டுவிடுகின்றது. மக்கள் இவ்விஷயத்தில் எப்படிக் கவனமாக இருக்க வேண்டுமென்று நேற்றைய "ஈழநாடு" இதழில் டாக்டர் விளக்கியுள்ளார். அந்த "நாசினி"யைப் பாவிக்க வேண்டியவர்கள், அவர் கூறியுள்ள யோசனைகளின்படி நடந்தால், ஆபத்துகள் குறையும்.

தேகத்தில் காயங்கள் உள்ளவர்கள் அதைக் கலக்கவோ தெளிக்கவோ கூடாதென்றும், காற்றுக்கு எதிர்ப்புறமிருந்து தெளிக்கக் கூடாதென்றும், தோட்டத்திலே, கிருமி நாசினி தெளித்த பின் காய்கறி, பழங்கள் இவற்றைச் சில நாட்கள் அல்லது வாரங்கள் கழித்தே பயன்படுத்த வேண்டுமென்றும் டாக்டர் எச்சரிக்கை செய்திருப்பதிலிருந்து, கிருமி நாசினி எவ்வளவு ஆபத்தானதென்பதை உணரலாம். ஆகவே இது பயிற்சி பெற்றவர்கள் மூலமோ, அல்லது கிராமாபிவிருத்தி சங்கமூலமோதான் பாவிக்க வேண்டுமென்றும், அனுபவமில்லாத தனிப்பட்டவர் இதை உபயோகிக்கக்கூடாதென்றும் நிபந்தனை போடுவது மக்கள் பாதுகாப்புக்கு அவசியமாகும். பயிர்களைப் பாதுகாக்கும் முயற்சியில் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திவிடக் கூடாது.

கிருமிநாசினிகளில் பலவகை இருப்பதாயும், மக்கள் உயிருக்கு ஆபத்தில்லாதவையும் இருப்பதாகவும் அறிகிறோம். அரசாங்க ரஸாயன வல்லுனர்கள் இவற்றை ஆராய்ந்து, மக்களுக்கு ஆபத்தில்லாத கிருமி நாசினிகளை மட்டும் இறக்குமதி செய்யவும், ஆபத்தானவற்றைத் தடுக்கவும் வேண்டும். பல மனித உயிர்கள் மடிந்திருப்பதால் இவ்விஷயத்தில் அரசாங்கம் இனியும் கவலையீனமாக இருக்கக் கூடாது.

# காந்திஜி நகைச்சுவையும் மனிதத் தன்மையும்

.... டாக்டர் ஏ. சக்கரவர்த்தி ....



உலகில் வாழ்ந்து மறைந்த இலட்சிய வாதிகளெல்லாம் தங்களின் உயர்ந்த இலட்சிய வாழ்க்கைகளுக்கிடையே ஒரு சில நகைச்சுவைக் கதிர்மணிகளை அவ்வப்போது உதிர்த்துக்கொண்டிருந்த காரணத்தினலேதான் ஓரளவுக்காவது நிம்மதியான வாழ்க்கையை வாழ்ந்து முடித்திருக்கிறார்கள்!

மதத்தையும், மூடப்பழக்கங்களையும் கண்டித்துப் பெரும்பாலோரின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்ட லட்சியவாதி சாக்கிரட்டீஸ், தன் பெருந்துயர வாழ்க்கையின் இறுதிக்காலங்களை இளைஞர் மணிகளிடையே நகைச்சுவை பேசுவதன் மூலமாகத்தான் கழித்தார்! லிங்கனும், வால்டேரும், ரஸலும், பெர்னாட் ஷாவும்கூட அப்படித்தான். ஏன் அண்ணல் காந்தியாரின் சுதந்திர வாழ்க்கையும் அப்படித்தான் கழிந்தது. அந்த அமர அண்ணல் பேசிய, தரத்தாலும் லட்சியத்தாலும் உயர்ந்த நகைச்சுவைகள் அழிக்க முடியாதவை. அவற்றுட் சில கலை மலரில் வெளியாகியுள்ளன.

அந்த அமர அண்ணலின் அழியாததும், மனிதத்தன்மை கலந்ததுமான நகைச்சுவைகள் அவரின் வாழ்க்கையிலிருந்தே திரட்டப்பட்டவையாகும்.

ஒருமுறை அவர் 'எர்வாடா' சிறையில் விடுதலைப்போராட்டத்தின் காரணமாகச் சிறைபட்டுக்கிடந்தபோது தன்னிடம் ஏழு மதசம்பந்தமானதும், தரத்தாலும், இலட்சியத்தாலும் உயர்ந்ததுமான புத்தகங்களை உடன் வைத்துக்கொண்டிருந்தாராம். இவற்றுள் ஒன்று மௌலானா அபுல் கலாம் ஆசாத்தால் அளிக்கப்பட்ட 'உருது மதநூலும்' மற்றொன்று அண்ணலின் நித்திய வாழ்க்கையில் தேவைப்படும் பொருள் அகராதியுமாகும்...! பலே பேர்வழியான அந்தச் சிறை அதிகாரி இதுசம்பந்தமாக அண்ணலுக்கு ஒரு யோசனை சொன்னார். இந்த ஏழு புத்தகங்களையும் சிறை நூல் நிலையத்திற்கு அண்ணல் அன்பளிப்பாகக் கொடுத்துவிடுவதென்றும், பிறகு வேண்டும்போது அவைகளை நூல் நிலையத்திலிருந்து கடனாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாமென்றும் மிகச்சாதுர்யமான யோசனையொன்றைச் சொன்னார் அந்தச் சிறையதிகாரி! இந்த யோசனையைக் கேட்டவுடன் அண்ணலுக்குக் கோபம் வருவதைவிட சிரிப்புத்தான் வந்ததாம்! கலகலவென்று சிரித்துவிட்டு, "ஏன் என் வலது கரத்தையும் உங்கள் நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாகக் கேளுங்களேன். கொடுத்துவிட்டு, வேண்டும்போதெல்லாம் திருப்பி வாங்கிக்கொள்ளுகிறேன்!" என்றாராம். வெட்கமடைந்த சிறையதிகாரி அண்ணலிடமே இந்த ஜீவாதார உரிமைக்கு மறுப்பேதும்சொல்லாமல், அந்த ஏழு புத்தகங்களையும் அண்ணலிடம் இருக்க அனுமதித்துவிட்டாராம்! எனவே அதுமுதல் என்னவோ, சிறைக்குச் செல்பவர்களெல்லாம் இப்போது புத்தகங்களையும் தைரியமாக உடன் கொண்டுசெல்லுகின்றனர்.

மற்றொருமுறை இதே சிறையில் தன் நித்திய தேவைக்காக, அதாவது உணவுவேளைகளின்போது ரொட்டியையும் எலுமிச்சம்பழங்களையும் தானே அரிந்து பக்குவப்படுத்துவதற்கு ஒரு சிறு பேனாக்கத்தியையும் தன்னுடன் வைத்திருந்தாராம், அண்ணல். இது சிறை அதிகாரியின் கண்ணை உறுத்தியதாம்! அண்ணல் அதை வைத்துக்கொள்வதைத் தடுக்க முன்வந்தாராம் அந்தச் சிறை அதிகாரி. வழக்கம்போலப் பின்வாங்கவோ அல்லது அண்ணலின் நகைச்சுவையைக்கண்டு ரசிக்கவோ என்னவோ, கத்தியைப்பார்த்து 'அது கூடாது' என்றாராம் சிறை அதிகாரி. மறுக்ஷணமே அண்ணல் சிரித்தபடி என்ன சொன்னார் தெரியுமா? 'ஏன் நான் சாப்பிடக் கூடாது' என்றுதான் சொல்லுங்களேன்' என்றாராம். அது கேட்டுச் சிலையாக சிறை அதிகாரி நின்றார்.

## செனேட் நியமனங்கள்

இலங்கை செனேட் சபையின் 30 ஸ்தானங்களில் பத்து காலியாகின்றன. இவற்றுக்கு போட்டா போட்டிகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. பார்லிமெண்ட் தேர்தலில் தோற்றவர்களைத் தாங்கள் செனேட் சபைக்கு நியமிக்கப் போவதில்லை என்று அரசாங்க பார்லிமெண்ட் கட்சி ஏகமனதாகதீர்மானித்தது வரவேற்கத் தக்க கொள்கையாகும்.

ஆனல் பல போட்டாபோட்டி கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து தக்கவர்களை அச்சபைக்கு நியமிப்பது மிகப் பொறுப்பான காரியம். தேர்தல் மூலம் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்க முடியாதவர்களுக்கு, அச் சபையில் பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்யவே 15 நியமன ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு கவர்னர்ஜெனரலே தக்கவர்களை நியமிக்க வேண்டுமென்று அரசியல் சட்டம் கூறுகிறது. நாட்டிலே பத்து லட்சத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளியினருக்கு அச் சபையில் ஒருவர் கூட பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை. இது பெரிய குறை. அம் மக்களைப் பாதிக்கக்கூடிய பல சட்ட திட்டங்கள் அச்சபையில் விவாதத்துக்கு வருகையில், அவர்கள் சார்பாகப் பேச ஒருவரும் இல்லை. ஆகவே இம்முக்கிய குறையை நீக்க இந்திய வம்சாவளியினருக்கு அச்சபையில் இரண்டொரு நியமன ஸ்தானங்களாவது கிடைக்கும்படி செய்யவேண்டும். அப்படிச்செய்வதால் வீண் அவசரப்பட்டு சட்டத்தவறுகள் செய்யாமல் தடுப்பதுடன், நியமனஸ்தானங்கள் ஒதுக்கியதன் நோக்கமும் நிறைவேறும்.

# உருளைக்கிழங்கு கெடாதிருக்கவழி

## பத்துவருட ஆராய்ச்சியின் பலன்

அநேக வருடங்களுக்கு முன்னரே ஜேர்மன் விஞ்ஞானி டாக்டர் டெட் வீலர் உருளைக் கிழங்குகள் முளைவிடுதல் குறித்து ஆராய்ச்சிகள் செய்தபோது உருளைக்கிழங்குகளுக்கு பூச்சி வருவதைக் கண்டுபிடித்தார். உருளைக்கிழங்குகள் இம்மாதிரி சேதம் ஏற்படுவதால் விவசாயிகளுக்கும், நாட்டிற்குமே பெரும் நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே இந்த சேதத்தைத் தடுக்கக் கண்டுபிடிக்கப்பட்ட வழி ஒரு பெரும் பிரச்சினையைத் தீர்ப்பதாக உள்ளது. மேற்கு ஜேர்மனியில் உருளைக் கிழங்கு நஷ்டம், வருடத்திற்கு 10 லட்சம் தொன்.

பத்துவருட ஆராய்ச்சிகள் பிரஸ்விக்கிலுள்ள ஜேர்மன் விவசாயத் துறையில் நடைபெற்றதின்விளைவாகப் புது மருந்து ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இது, கிழங்குகள் முளை விடாமல் தடுக்கவும் செய்கிறது.

கார்பானிலிக் அமிலத் திரவம் கலந்த மருந்து உபயோகிக்கப்படுவதால் அவை உருளைக் கிழங்கு முழுவதையும் பாதித்து முளைவிடாமல் தடை செய்கிறது. உருளைக் கிழங்குகள் கெடாமல் இருப்பதுடன் அவை, தானே தோல் உரிக்கும் இயந்திரத்தில் உபயோகிக்கும்படியான நிலையில்இருக்கின்றன. இதனல் 18 பாகை ஸெண்டிகிரேட் உஷ்ணத்திலும் உருளைக்கிழங்கு பாதுகாக்கப்படுகின்றன.

இந்தப் புது பாதுகாப்பு முறை காரணமாக சேதமாகும் அளவு வெகுவாகக் குறைந்துவிட்டது. முளை விடுதலுக்கும் பூச்சியடைவதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

முளை விடுவதற்கு ஒருஅளவு கதகதப்பு ஏற்படுகிறதென்றும் அது பூச்சிகள் ஏற்படச் சாதகமாகஇருக்கின்றனவென்றும், கார்பானி-லித் அமிலத் திரவம் இம்மாதிரி முறையில் சேதம் ஏற்படாமலிருக்க உதவுகிறதென்றும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. 100 கிலோ உருளைக் கிழங்குகளுக்கு 0.50 ஜேர்மன் மார்க் செலவில் மருந்து உபயோகித்தால் போதுமானது.

# தியானத்தால்

## அற்புதங்களைச் சாதிக்கலாம்

### நிருபர்களுக்கு மகரிஷி அளித்த பேட்டி

பான், ஜூன் 12

உத்தர காசியைச் சேர்ந்த மகரிஷி மகேஷ யோகி சமீபத்தில் பான் நகருக்கு விஜயம் செய்தார். லண்டனில் நடைபெற்ற ஆத்மிக காங்கிரஸில் பங்கெடுத்துக் கொண்டு திரும்பிய இவரை சுமார் 3000 ஜேர்மன் சீஷர்கள் வரவேற்றனர்.

மகரிஷி கூறும் முறைகளைப் பின்பற்ற எல்லோருக்கும் முடியாது என்றாலும், இவர் சீஷர்களில் முக்கியமானவரான நிக் கோலஸ் கிரப் ப்ளுசெர் இந்த யோகியிடம் அற்புதமான சில சக்திகள் இருக்கிறதென்பதை ஒப்புக் கொள்கிறார். இவர் கஷ்டப்படுபவர்களையோ அல்லது துக்கப்படுபவர்களையோ சந்தித்தால் "நீங்கள் தியானம் செய்கிறீர்களா? நீங்கள் ஹிமாலயத்தைச் சேர்ந்த அந்த மகானை சந்திக்க வேண்டும்" என்று சொல்வார். அமைதியும் ஆனந்தமும் பெற விரும்பிய அநேக ஜேர்மனியர் இவர் யோசனையைப் பின்

(5ம் பக்கம் பார்க்க)

### ஐயாறன் எழுதுவது

சென்னையிலே புதுப்புது ஓட்டல்கள் முதல்தரமான முறையில் ஏற்பட்டு வருகின்றன. கட்டணங்களும் அதிகமில்லை. அந்த மாதிரியான ஓர் ஓட்டலையாவது யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து நடத்தக் கூடாதா? என்று இங்குள்ள ஓர் ஓட்டல்காரரைக் கேட்டேன்.

நடத்தலாமென்றும், யாழ்ப்பாணத்தில் நல்ல வியாபாரமாகுமென்றும், ஆனல் சென்னையிலிருந்து சமையல் செய்யவும், பட்சணம்போடவும் கைதேர்ந்த நாலைந்து பேர்களையாவது வரவழைக்க வேண்டுமென்றும், ஆனல் விஸா தடைகள் இதற்குக் குறுக்கே நிற்பதாயும் கூறினர்.

⁂ ⁂ ⁂

சமையல்காரர்களுக்கு விஸா கொடுக்கப்படாதென்ற ஒரு கண்மூடி உத்தரவு இங்கு இருந்துவருவதால், சென்னையிலிருந்து சமையற்காரர்களை இங்கு வரவழைப்பது குதிரைக்கொம்பு. கொழும்பிலுள்ள கிரீன்லன்ட்ஸ் ஓட்டலுக்கு மட்டும் இரு சமையற்காரர்களை அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது. அதற்கும் எவ்வளவு சிபார்சும், பணச்செலவும் ஆயிற்றோ!

சென்னையிலிருந்து வரும் யாத்திரிகர்கள், கலைஞர்கள் முதலியோர் கொழும்புக்கு வந்தால் அங்குதான் பெரும்பாலும் தங்குகிறார்கள். கொழும்புக்கு வெளியே, யாழ்ப்பாணம், கண்டி முதலிய இடங்களில் அவர்கள் தங்கி சாப்பிடக்கூடிய முதல்தர சைவ ஓட்டல் ஒன்றுகூட இல்லை. இதனல் இந்தியாவிலிருந்து யாத்திரிகர்கள் இங்கு வரவும் தயங்குகின்றனர்.

இப்போது விஸா வரி விதித்திருப்பதால் அந்த வரியைச் செலுத்தி சென்னையிலிருந்து சமையல் நிபுணர்கள் சிலரை வரவழைக்கப் புதிய வசதி இருக்கிறது. அவ்விதம் செய்தால் இங்கு ஓட்டல்களை முதல் தரமாக்கலாம் என்கிறார் ஓர் அன்பர்.

* * *

இலங்கையில் யாத்திரை இலாகா இப்போது பிரதமரின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளது. யாத்திரிகர் இலாவுக்கு இந்தியாவிலிருந்து ஒரு நிபுணர் தலைவராக வருகிறாராம். அவர் வந்தபின்பாவது, இங்கு தீவெங்கும் ஓட்டல் வசதிகளைப் பெருக்க, கூடுமான ஏற்பாடுகளைச் செய்யவும், விஸா தடைகளைத் தளர்த்தவும் செய்வார்களா என்று பார்ப்போம்!

* * *

ஓர் அன்பருக்கு விஸா ஐந்து வருடங்களுக்குமுன்பே முடிந்துவிட்டது. அவர் மறைவாக இருந்துகொண்டு, உழைத்துச் சாப்பிடுகிறார். இப்போது விஸா வரி சட்டம் அமுலுக்கு வந்துள்ளதால், அந்த வரியை எப்படியாவது கட்டினல் விஸா பெற்று, பயமில்லாமல் இருக்கலாமா! என்று கேட்கின்றார்.

விஸா வரிச் சட்டத்தை வருமானத்துக்காகவே கொண்டு வந்ததாக நிதிமந்திரி தெரிவித்தார். அப்படியாயின் அவ்வரி செலுத்தத் தயாராக இருப்பவர்களுக்கு, விஸாவை தடை இல்லாமல் கொடுக்கவேண்டும். இதைப்பற்றி அரசாங்கம் தெளிவான ஓர் அறிக்கையை வெளியிட்டால், பலருக்குக் கவலை தீருவதுடன், அரசாங்கத்துக்கும் வருமானம் கிடைக்க முடியும்.

இது மனிதர்களைப் பாதிக்கும் சட்டமானதால், மனிதாபிமானத்துடனே இதை அமுல் நடத்தவேண்டும்.

* * *

வருகிற ஜனவரி மாதம் முதல் இலங்கையில் குதிரைப் பந்த

(5-ம் பக்கம் பார்க்க )

# அல்ஜீரியாவில் மீண்டும் பல கைகலப்புகள்

## 14 பேர் மாண்டனர்

அல்ஜியர்ஸ், ஜூன் 12

அல்ஜீரியாவில் தேசியவாதிகளுக்கும், பொலிசாருக்கும், அங்குள்ள ஐரோப்பியருக்கும் கைகலப்புகள் மூண்டன. அல்ஜியர்ஸில் தேசியவாதிகள் கைக்குண்டுகளை வீசினர். இதன் விளைவாக 9 ஐரோப்பியர் காயமுற்றனர். நேற்று நடைபெற்ற கைகலப்பில் 14 பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தைத் தடுத்துவிடும் சட்டம் நிறைவேறியுள்ளது. குதிரைப் பந்தய சூதாட்டத்தால் அழகிய பல குடும்பங்கள் நாசமாகியுள்ளன. இச்சட்டம் நிறைவேறியதை, பலரும் வரவேற்பர். ஆனால் சூதாட்டம் பல்வேறு முறைகளில் ரகசியமாக நடக்கலாம். நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளவேண்டுமேயன்றி, வெறும் சட்டங்கள் எவ்வளவு தூரம் நம்மைப் பாதுகாக்க முடியும்?

## ஜெனிவா மகாநாடு ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலுள்ள நீஸ் என்ற பட்டினத்துக்குப் புறப்பட்டுச் சென்ருர்.

லாவோஸ் இடதுசாரித் தலைவர் இளவரசர் பூமி நொசாவாங் நடுநிலைமைப் பிரதமர் இளவரசர் சுவன்னபூமா ஆகியோரைச் சந்தித்துப் பேசுவதற்கு லாவோஸ் வலதுசாரிப் பிரதமர் இனவரசர் பூன் ஊம் ஒப்புக்கொண்டுவிட்டாரென்றும் இவர்கள் சந்திப்பு விரைவில் நடைபெறுமென்றும் கம்போடியப் பிரதமர் இளவரசர் நொரடம் சிகானுக் நேற்று அறிவித்தார்.

## தியானத்தால்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி தியானத்தை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் மகரிஷியைச் சந்திக்க வந்த பொழுது புஷ்பங்கள், பழங்கள், ஒரு வெள்ளைக் கைக்குட்டை தங்களால் உதவக்கூடிய பணம் இவைகளை எல்லாம் வைத்து காணிக்கை செலுத்தி உபதேசம் பெற்ருர்கள்.

மகரிஷி மகேஷ் யோகி ஒரு நிருபருக்களித்த பேட்டியில் கூறியதாவது: "தியானத்தின் சாதனையைப்பற்றி விஞ்ஞான ரீதியாக விளக்க முடியும். அணுசக்தி பௌதிக சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது அது. நான் இதன் மூலம் பல அற்புதங்களை சாதிக்க முடியும்" இதை எப்படி சாதிக்க முடியும் என்பதை அவர் கூற மறுத்து விட்டார்.

பல்கலைக்கழக வட்டாரங்களில் ஏராளமான ஜேர்மனியர்கள் இவருடைய சிஷ்யர்களாக இருந்து வருகின்றனர். இவருடைய ஜேர்மன் சீஷர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இங்குள்ளவர்கள்தான். இவர்கள் பெரும் அளவுக்கு நன்கொடை வசூலித்துக் கொடுத்துள்ளனர்.

இந்தியாவில் கங்கை நதிக்கரையில் இவர் சர்வதேச தியானக் கழகம் ஒன்றை ஆரம்பித்திருக்கிருர். இக்கழகம் சமீபத்தில்தான் சீஷர்களைச் சேர்த்துக்கொள்ள ஆரம்பித்தது. 48 பேர் 'நிரந்தர ஆனந்த' நிலையை அடைவதற்காக தியான வகுப்புகளில் பங்கெடுத்துக் கொண்டு வருகின்றனர். மகரிஷி மகேஷ் யோகியே வகுப்புகளை நடத்தினர். இவ்வகுப்புகள் மூன்று மாத காலம் நடைபெற்றது.

மகரிஷி ஒருவருக்கு மட்டுமே தெரியும் அற்புதங்கள் நிகழ்த்தும் அந்த பரம இரகசியத்தை அறிய முடியும் என்று அவர் சீஷர்கள் நம்புகின்றனர்.

## மின்சாரம் தாக்கி பெண் மரணம்

வெல்லம்பிட்டி, திங்கள்

ஏழு குழந்தைகளுக்குத் தாயான 40 வயதுள்ள லீலாவதி என்ற பெண் முள்ளுக் கம்பிவேலியொன்றைக் கடந்து செல்ல எத்தனித்த சமயம், மின்சாரத்தினுல் தாக்குண்டு மரணமானுர்.

செலமுள்ளவில் வசிக்கும் லீலாவதி என்ற பெண் கடைக்குச் சென்று வீட்டுக்குத் திரும்பிய சமயம், பக்கத்து வீட்டிலே நோய்வாய்ப்பட்டிருந்த ஒருவரின் குரல்கேட்டு, அங்குள்ள முள்ளுக்கம்பி வேலியின் கீழ் நுழைந்து செல்ல முயற்சித்தார். ஆனல் இவ்வேலிக் கம்பிகள் மின்சாரக் கம்பத்தின் கம்பிகளுடன் தொடர்புகொண்டிருந்ததால் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்திருக்கிறது.

தாக்கப்பட்ட லீலாவதி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட முன்னரே மரணமானுர்.

## ஸ்ரீ ரங்கம் திருவரங்கமாகும்?

திருச்சினுப்பள்ளி, ஜூன் 12

ஸ்ரீ ரங்கநாதர் சயனித்திருக்கும் புண்ணிய க்ஷேத்திரமான ஸ்ரீ ரங்கத்திற்கு திருவரங்கம் என்று பெயரிட வேண்டும் என்று மத்திய தபால், தந்தி, போக்குவரத்துமந்திரி டாக்டர் பி. சுப்பராயன் யோசனை கூறியுள்ளார்.

இங்கு நடைபெற்ற விழா ஒன்றில் பேசுகையில்தான் மேற்கண்டவாறு கூறினர்.

இலங்கையிலுள்ள இந்திய வமிசாவளியினரின் பிரஜா உரிமைப் பிரச்சினை பற்றிக் குறிப்பிடுகையில், இந்தியாவின் அயல்நாட்டுக்கொள்கை, அது இலங்கையுடன் கொண்டுள்ள உறவுகள் ஆகியவற்றுடன் இந்தப் பிரச்சினையை ஜாக்கிரதையாக அணுக வேண்டும் என்றும் திரு. சுப்பராயன் கூறினர்.

## பாஷையூர் அர்ச். அந்தோனியார்கோவில் மகோற்சவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இன்று காலை 4 மணி தொடக்கம் 7-30 வரை 3 திவ்விய பூசைப் பலிகள் இடம்பெறும் பிற்பகல் 4 மணிமுதல் மாலை 7 மணிவரை அர்ச். அந்தோனியாரின் திருச் சொரூப ஊர்வலம் வழமைபோல் நடைபெறும். இது சம்பந்தமாக யாத்ரீகர்களுக்கு இலங்கை போக்குவரத்துச்சபை விசேஷ ஒழுங்கு செய்திருக்கிறது.

## தாயகம் திரும்ப ஆவல்

புதுடில்லி, ஜூன் 12

இந்தியாவிலுள்ள போர்த்துக்கல் பிரதேசமான டாமனிலிருந்து 400 போலிஸ்காரர்கள் தாயகம்திரும்பவேண்டுமெனக் கோரியுள்ளனர்.

# 'லீவு பெருத நாட்களுக்கு சம்பளம் வழங்குக'

## குமாஸ்தாக்கள் சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் ஒவ்வொருவருடத்திலும் தமக்குரிய லீவுகளை உபயோகப்படுத்தாது விட்டால் அவ்விதம் அவர்கள் உபயோகப்படுத்தாது விடும் லீவு நாட்களுக்குரிய சம்பளத்தை அவர்களுக்கு அரசாங்கம் வழங்க வேண்டுமென அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்க சம்மேளனம் திறைசேரி உதவிக் காரியதரிசியிடம் விண்ணப்பித்துள்ளது.

## பொதுத்தேர்தலில் தமிழரசுக் கழகம் போட்டியிடாது

சென்னை, ஜூன் 12

வருகிற பொதுத்தேர்தலில் தமிழரசுக் கழகம் போட்டியிடமாட்டாது என்று ம. பொ. சிவஞானம் அறிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல்பற்றி திரு. ம. பொ. சி. கூறுகையில் தமிழரசுக்கழகம் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடமாட்டாதென்றும், ஆனல், தமிழரசுக் கழகத்தினர் சுயேச்சையாகப் போட்டியிடலாம் என்றும், அவர்களுக்கு கட்சி ஆதரவு அளிக்கும் என்றும் தெரிவித்தார்.

## விமான விபத்தில் 19 பேர் பலி

கெய்ரோ, ஜூன் 12

கே. எல். எம். ராயல் டச் கம்பெனிக்குச் சொந்தமான ஒருவிமானம் கெய்ரோ விமான நிலையத்துக் கருகில் நொறுங்கி வீழ்ந்ததால் 19 பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது. விமானத்தில் 25 பிரயாணிகளும் 7 சிப்பந்திகளும் இருந்தனர்.

## காங்கிரஸ் வெற்றிக்கு காரணம்

கட்டாக், ஜூன்

"ஒரிஸ்ஸாவில் காங்கிரஸ் வெற்றி பெற்றதற்குக் காரணம் பணமேதான் என்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும் நினைக்கின்றன. இது காங்கிரஸின் வெற்றியென நான் நினைக்கவில்லை. இது பணத்தின் வெற்றியேதான். இந்தப் புதிய போக்கினுல் ஜனநாயகத்தின் எதிர்காலத்திற்கே பெரிய ஆபத்து"

இவ்வாறு பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உப தலைவரும் லோக்சபை மெம்பருமான திரு. எஸ். துவிவேதி கூறியுள்ளார்.

## மாநகரசபை வட்டார உபதேர்தல்

கொழும்பு, திங்கள்

மாநகரசபையின் கறுவாக்காட்டு வட்டாரத்தின் உபதேர்தலில் யு. என். பி. யின் சார்பில் திரு. ஆர். பிரேமதாசா போட்டியிடலாமென நம்பப்பப்படுகிறது.

திரு. ஜோர்ஜ் ஜயசூரியாவின் ராஜினமாவினுல் காலியான இந்த ஸ்தானத்துக்கு திரு. லலிதா ஹேவாவிதாரண. ஏ. பி. பெர்னன்டோ, ஆர், பிரேமதாசா ஆகியோரில் ஒருவரை யு. என். பி. தனது அபேட்சகராக நிறுத்துமென அறியப்படுகிறது.

# 3-வது திட்டத்தில் வேலையில்லா பிரச்னைக்கு 3 அம்ச நடவடிக்கை

புதுடில்லி, ஜூன் 12

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினை சம்பந்தமாக 3 அம்ச நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முதல் இரண்டு திட்டங்களைப் போலல்லாமல் வேலை வாய்ப்பு இலக்குகள் கைகூட வகைசெய்யப்படும்

உடலுழைப்புத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதை அதிகரிப்பதற்காக அடுக்கட்டுத் திட்டங்களில் கிடைக்கும் வாய்ப்புகள் பற்றி புனர் பரிசீலனை செய்வதற்காக சீனியர் அதிகாரிகளைக் கொண்ட நிரந்தரக் கமிட்டி அமைக்கப்படும். இயந்திரங்களை உபயோகிப்பதால் கணிசமான லாபம் கிடைத்தாலன்றி உடலுழைப்புத் தொழிலாளர்களையே வேலைக்குப் பயன்படுத்துமாறு எல்லா திட்ட அதிகாரிகளையும் திட்டக்கமிஷன் வலியுறுத்தியுள்ளது.

முதல் இரண்டு திட்டங்களில் ஏற்பட்ட தவறுகளைத் தவிர்ப்பதற்காக வேலையில்லாப் பிரச்சினையை மூன்று திசைகளில் அணுக உத்தேசிக்கப்படுகிறது. முதலாவதாக திட்ட வரம்புக்கு உட்பட்டவகையில் வேலை வாய்ப்பளிக்க முயற்சிகள் இன்னும் பரவலாகவும் சமனமாகவும் இருக்க வேண்டும். இரண்டாவதாக கிராம கைத்தொழிலபிவிருத்திக்கு பெரும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். கிராம மின்சார வசதி, கிராம கைத்தொழில் பேட்டைகள், கிராமத்தொழில்களை வளர்த்தல் முதலியவை வலியுறுத்தப்பட வேண்டும். மூன்ருவதாக சுமார் 25 லட்சம்பேருக்கு வருடம் சராசரி 100 நாள் வேலையளிக்கும் கிராமப்பணித் திட்டத்தை அமுலாக்க உத்தேசிக்கப்படுகிறது.

மூன்ருவது திட்டகாலத்தில் மேலும் 170 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கவேண்டும். அவர்களில் மூன்றில் ஒருபங்கு நகரவாசிகள். இரண்டாவது திட்ட முடிவில் வேலை கிடைக்காதிருப்பவர்கள் தொகை 90 லட்சம் என்று மதிப்பிடப்படுவதால் 3-வது திட்டத்தில் மொத்தம் வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை 260 லட்சம் எனக் கணக்கிடப்படுகிறது மூன்ருவது திட்டத்தில் 170 லட்சம் வேலைகளை உண்டாக்க உத்தேசிக்கப்படுகிறது.

அடுத்த 15 ஆண்டுகளில் மேலும் 7 கோடி பேர்களுக்கு வேலை கிடைக்கவேண்டும் என்று மதிப்பிடப்படுகிறது. 1976-க்குள் விவசாயத்தைச் சார்ந்திருப்போரின் சதவிகிதம் 60 க்குக்குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தாராசிங் கடிதம்

புதுடில்லி, ஜூன் 12

அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங் திரு. நேருவின் கடிதத்திற்குப் பதில் அனுப்பி விட்டதாய் அறிவிக்கப்பட்டது.

## "கம்யூனிஸடுகளே காரணம்"

திருவனந்தபுரம், ஜூன் 12

கேரளத்தில் பீர்மேடு போன்ற ரிசர்வ் காடுகளில் நடைபெற்ற வெளியேற்றத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடிக்கு கம்யூனிஸ்டுகளே காரணம் என மந்திரி புன்றூஸ் இங்கு கூறினர். திரு. கோபாலன் உண்ணுவிரதம் ஆரம்பிக்காமலிருந்தால் இப்பிரதேசங்களில் மாமூல் நிலை ஏற்பட்டிருக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஈரானில் பூகம்பம்

டெஹ்ரான், ஜூன் 12

தெற்கு ஈரானில் மற்ருேர் பூகம்பம் ஏற்பட்டதன் காரணமாய் ஒருவர் மாண்டார். 7 பேர் காயமடைந்தனர். முன்பு ஒரு கிராமத்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் 50 பேர் மாண்ட செய்தி முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 600 மாணவர்களுக்கு இடமுண்டு

சென்னை, ஜூன் 12

தமிழ் நாட்டின் வைத்தியக் கல்லூரிகளில் இவ்வாண்டு 600 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனத் தெரிகிறது.

## இறுதிக் கூட்டம்

கெய்ரோ, ஜூன் 12

நடு நிலைமை நாடுகளின் அதிபர்கள் மகாநாடு பற்றி நடைபெறும் ஆயத்தக் கூட்டம் இன்று கெய்ரோவில் இறுதியாக நடைபெறுகிறது.

## அமெரிக்கா ஏற்காது

வாஷிங்டன், ஜூன் 12

ஜெர்மனி விஷயமாக சோவியத்தின் யோசனைகளை அமெரிக்கா ஏற்கவில்லை என்பது தெளிவு என்று வெளி நாட்டு மந்திரி திரு. ரஸ்க் கூறினர். ரஷ்யாவுக்குப் பதில் அனுப்பு முன் மேற்கு நாடுகளை அமெரிக்கா கலந்தாலோசிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தங்கம், வெள்ளி மார்க்கெட்

யாழ்ப்பாணம், ஜூன் 12

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 104 - 00 |
| நகைப்பவுன் | 98 - 00 |
| தங்கப்பவுன் | 101 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 51 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 15 |

## வாக்காளருக்கு ஸ்ரீ மேதாப் நன்றி

கட்டாக், ஜூன் 13

காங்கிரஸ்—கணதந்திர பரிஷத் கூட்டு சர்க்காரில் முதல் மந்திரியாக இருந்த டாக்டர் ஹரேகிருஷ்ண மேதாப் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் காங்கிரஸுக்கு வெற்றி கிடைத்ததற்காக வாக்காளர்களுக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்திருக்கிருர். "ஒரிஸ்ஸாவில் தற்போது ஸ்திரமான மந்திரி சபை ஏற்படும். குறிப்பாக ஸ்ரீ விஜயானந்த் பட்நாயக்கை பாராட்ட வேண்டும். அவருடைய தலைமையில் நிர்வாகா தூய்மையாகவும், திறமையாகவும் நடக்கும் என்று நம்புகிறேன்" என ஸ்ரீ மேதாப் கூறியிருக்கிருர்.

# வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க

## கூட்டுப்பண்ணைகள்

### அரசாங்கம் பரிசீலனை

கொழும்பு, திங்கள்

வேலையில்லாதவர்களுக்கு வேலை அளிக்கும் முகமாக வரண்ட பிரதேசப் பகுதிகளில் கூட்டுப்பண்ணைகள் அமைப்பது பற்றிய திட்டமொன்றை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

சமீப காலமாக அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதற்கு அரசாங்கம் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகளில் கூட்டுப் பண்ணைகள் அமைப்பது முதல் திட்டமாக இருக்கும் என்று அறியப்படுகிறது.

1,55,666 பேர் வேலையில்லாதிருப்பதாக கடைசியாக கிடைத்த புள்ளி விபரங்களிலிருந்து தெரியவருகிறது.

தொழில் இணைப்புக் காரியாலயங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்பவர்கள் வரவரக் குறைவடைந்து வருவதாக தொழிற் கந்தோர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தங்களுக்கு தொழில் இணைப்புக் காரியாலயம் வேலை தேடித்தருமென்ற நம்பிக்கையை அவர்கள் இழந்து வருவதாக அறியப்படுகிறது.

கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் அமைத்துக் கொள்ளும் வேலையற்ற இளைஞர்களுக்கு கூட்டுப்பண்ணைத் திட்டத்தின் கீழ் முற்பணமும் உபகரணங்களும் கொடுத்துதவப்படும் எனத் தெரிகிறது.

முடிக்குரிய காணிகள் இவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்படும். நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்யவும் கோழிப் பண்ணை, கால் நடைப்பண்ணை ஆகியவைகளை அமைக்கவும் அரசாங்கம் சகல வசதிகளையும் செய்து கொடுக்கும்.

## கல்வி மந்திரிக்கு கி. மு. சங்கம் மகஜர்

கோப்பாய், செவ்வாய்

"ஆசிரிய கலாசாலைக்கு தெரிவு செய்யப்படுவோர் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்து பிரவேசப் பரீட்சையில் திறமையாகத் தேறிய ஒரு பகுதி மாணவரையாவது அல்லது எஸ். எஸ். ஸி. சித்தியடைந்து ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களில் ஒரு பகுதியினரையாவது தெரிந்து பாடசாலைகளில் காலியாக வருமிடங்களில் ஆசிரியர்களாக நியமித்து அடுத்துவரும் வருடங்களில் ஆசிரிய கலாசாலைக்கு அனுமதித்தல் வேண்டும்" இவ்வாறு கோப்பாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சை சம்பந்தமாக கல்வி மந்திரிக்கு அனுப்பி வைத்திருக்கும் மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சென்ற 2 வருடங்களிலும் எமது கிராமத்தைச் சேர்ந்த எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த பல மாணவர், பல காலம் படித்து, பரீட்சைக் கட்டணம் 15ரூபாயும் செலுத்தி இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தும் பரீட்சையும் எழுதினர். ஒருவராவது எடுபடவில்லை. இரண்டு வருடங்களிலும் ஆசிரியகலாசாலைக்கு ஆசிரியர்களே தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்

ஆசிரியர்களைத்தான் ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவுசெய்யும் முடிவிருந்தால் மாணவர்களிடம் பரீட்சைக் கட்டணமும் அறவிட்டு அநியாயமாக ஏமாற்றுதிருக்கலாம். இந்த நாட்டில் நடைமுறையிலுள்ள கல்வித் திட்டப்படி சுமார் 12 வருடகாலம் கல்வி பயின்று எஸ். எஸ். ஸி. சித்தியடைந்து உரிய முறைப்படி ஆசிரிய கலாசாலைப் பரீட்சைஎடுத்தவர்களில் சித்தியடைந்த ஒருபகுதி மாணவரையாவது ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவுசெய்யாமலிருப்பது நியாயமானதா? எஸ். எஸ். ஸி. தமிழில் சித்தியடைந்த மாணவர்க்குரிய ஒரே வழியான ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சையும் அடைக்கப்படுமானல் அவர்கள் கதி என்னவாகும்.

## ரா. பி. மறைவுக்கு அனுதாபம்

உடுப்பிட்டி, திங்கள்

"சொல்லின் செல்வர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையின் மறைவு தமிழ்மொழிக்கும், தமிழ் கூறும் நல்லுலகுக்கும் மட்டுமன்றி, அறிவுலகத்துக்கே ஈடுசெய்யமுடியாதநட்டமாகும். நாத்தீக இயக்கமும், பொருள் முதல் வாதமும் கடலலைகள் போல எழுந்துவரும் இன்றைய காலகட்டத்தில் திரு. சேதுப்பிள்ளையின் மறைவு தமிழ் நாட்டின் துர்ப்பாக்கியமென்றே கருதவேண்டும்.

இவ்வாறு நேற்று முன் தினம் வாணிகலைக்கழக விசேட கூட்டமொன்றில் பேசும்போது ஆசிரியர் திரு. ஏ. விகோரி சின்னப்பு குறிப்பிட்டார். பண்டிதர் கே. வீரகத்தி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

திருவாளர்கள் எம். சுப்பிரமணியம், வீ. சிவராஜசிங்கம், பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் பேசினர்.

## பெற்றார் ஆசிரியசங்கம்

காத்தான்குடி, திங்கள்

கல்லடி உப்போடை, சிவானந்த வித்தியாலயத்தின் பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டம் வித்தியாலய அதிபர் திரு கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. கே. கணபதிப்பிள்ளை. உபதலைவர்; பண்டிதர் செ. பூபாலபிள்ளை. இணைச்செயலாளர்கள் திரு. க. சிவலிங்கம், திரு கா. நல்லரத்னம். பொருளாளர்: திரு. சி. பே. விஜசித்தம்பி. கணக்குப் பரிசோதகர்கள்: 1. திரு. த. உ. வே. கதிர்காமத்தம்பி, 2. திரு மா. வீரக்குட்டி.

## தெ. ஆபிரிக்கா

### வெள்ளையர் குடியரசு

கேப்டவுண், ஜூன் 12

தென்னபிரிக்காவை ஒரு வெள்ளையர் குடியரசாக்குவதே அரசாங்கத்தின் லட்சியம என பிரதமர் டாக்டர் வெர்வூட் கூறினர்.

## அங்கவீனமாகப் பிறக்கும் குழந்தைகள்

### அணுப்பரீட்சையின் விபரீத விளைவு

நியுயோர்க், ஜூன் 12

1946-ல் அமெரிக்கா பசுபிக் தீவுகளில் அணு ஆயுதப் பரீட்சைகளை நடத்தியது. இப்பகுதிகளை ஒட்டிய இடங்களிலுள்ள மக்களுக்கு உடல்நலக் கோளாறு ஏற்பட்டிருப்பதாக இன்னும் குற்றம்சாட்டுகின்றனர் என ஐ. நா. அறிக்கை தெரிவிக்கிறது. பசிபிக் தீவுகளைச் சுற்றிப்பார்த்த கோஷ்டி இந்த அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இக்கோஷ்டியில் இந்தியா, பிரிட்டன், பெல்ஜியம், போல்வியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் உளர்.

ரோஞ்சலப் தீவில் அணுக்குண்டு பரீட்சித்ததிலிருந்து அப்பகுதியிலுள்ளவர்களுக்கும், அவர்கள் குழந்தைகளுக்கும் பற்பல நோய்கள் பீடித்துள்ளதென அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியிருப்பதாக கோஷ்டி அங்கத்தினர் அறிவிக்கின்றனர்.

களைப்பு, தளர்ச்சி, உடல் வலி, வயிற்றுவலி போன்ற கோளாறுகள் ஏற்பட்டிருப்பதாகவும் அம்மக்கள் அங்கத்தினருக்குத் தெரிவித்தனர்.

ரோஞ்சலப் பகுதியில் அடிக்கடி கருச்சிதைவு உண்டாவதாகவும், குழந்தைகள் அங்கவீனமாகவும் புத்தி சுவாதீனமற்றும் பிறப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

## தொழில் வழிகாட்டி வகுப்பு

### மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஞாயிறு

திருக்கோணமலை முதல் பொத்துவில் வரையிலுள்ள ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டி வகுப்பு அரசினர் ஆசிரியகலாசாலையில் நேற்று ஆரம்பமாயிற்று. திருக்கோணமலையிலிருந்து எந்தஆசிரியரும் இவ்வகுப்பிற்கு வரவில்லை. மட்டக்களப்பின் தென்பகுதியிலிருந்து வந்த ஆசிரியர்கள் ஒவ்வொரு வார இறுதியிலும் நீண்டதூரம் பிரயாணஞ் செய்து வகுப்புக்கு வருதல் கஸ்டமாயிருக்குமாதலின் கல்முனையில் ஒருவகுப்பை நடத்துமாறு கேட்டனர். பொருளாதாரவசதிகுறைவாயிருப்பதால் அங்ஙனஞ் செய்வதை அரசாங்கம் ஏற்கவில்லையென்று விரிவுரையாளர் அறிவித்தார்.

## 'சுகாதார வாரத்துடன் பிரசாரம் முடிந்துவிடக்கூடாது'

### மலைநாட்டில் சுகாதார வாரக் கொண்டாட்டம்

நாவலப்பிட்டி, ஜூன் 11

நாவலப்பிட்டி சுகாதார அதிகாரியின் கீழ் இயங்கிவரும் ஹட்டன், பொகவந்தலாவை, மஸ்கேலியா, நோட்டன், நோர்வூட், கினிகத்தேனை, வட்டவளை முதலான பிரிவுகளின் சுகாதார வாரவிழா, ஹட்டனிலும் நாவலப்பிட்டியிலும் பிரத்தியேக விழாக்களாக இவ்வருடம் கொண்டாடப்பட்டன.

ஹட்டன் நகரசபைத் தலைவர் திரு.ஆரியதிலக்கா தலைமையில், ஹட்டன் சென். பொஸ்கோஸ் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பாடசாலை சிருர்களின் சுகாதார கதம்ப நிகழ்ச்சிகள் முக்கிய இடம் பெற்றன. ஹட்டன் மாவட்ட நீதிபதி திரு. ஜே. எம். முதனயக்கா தம்பதிகள் இவ்விழாவில் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டனர். ஸ்ரீமதி முதனயக்கா பரிசில்கள் வழங்கினர்.

சுகாதார விதிகளை மக்கள் இலகுவில் அறிந்து கொள்வதற்கு வசதியாக பூத உருவமொன்றினை மோட்டாரில்ஏற்றி சுமார் 100 மைல் ஊர்வலமாக பல்வேறு தோட்டப்பிரதேசங்களிடையேயும் கிராமப் பகுதிகளுக்கும் கொண்டு சென்றது நாவலப்பிட்டி சுகாதார பிரச்சாரத்தின் முக்கிய அம்சமாக விளங்கியது. ஒலிபெருக்கிமூலம் மக்களுக்கு சுகாதார விதிகள் இவ்வூர்வலங்களில் போதிக்கப்பட்டன.

நாவலப்பிட்டி சுகாதாரவிழா நகரசபைத்தலைவர் திரு. டி. பி. ரணசிங்கா தலைமையில் மிட்லண்ட் தியேட்டரில் நடைபெற்றது. இவ்விழாவில் சுகாதார சேவை உதவி அதிபர் திரு. பி. இராஜசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து சிங்களத்திலும்' தமிழிலும் சொற்பொழிவாற்றினர். அவர் குறிப்பிட்டதாவது:-

கடந்த வருடம் அகில இலங்கையிலும் இப்பகுதி சிறந்த வேலைகள் செய்து மைக்கேல் குணரத்தின வெற்றிக் கேடயத்தை தட்டிக்கொண்டது மகிழ்ச்சிக்குரியது. நெருப்புக்காய்ச்சல் போன்ற குடல்சம்பந்தமான வியாதிகளை ஒழித்துக்கட்டுவதே இவ்வருடம் சுகாதார விழாவின் முக்கிய நோக்கம். பொதுமக்களின் ஒத்துழைப்பினால் சுகாதார சேவைகளில் வெற்றிபெற முடியும். இதற்கு முன்பு ஒத்துழைப்பு அளித்தது போன்று இனிமேலும் ஒத்துழைப்பு அளிப்பீர்களென நம்புகிறேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து இவ்விழாவிற்கு கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த டாக்டர் திரு. சி. சிவஞானசுந்தரம் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

சுகாதாரபிரச்சாரங்கள் சுகாதார வாரத்துடன் நின்றுவிடக்கூடாது. ஊர்வலங்கள், சுவரொட்டி விளம்பரங்கள் முதலானவற்றிற்கு தகுந்த பலன் கிடைக்கவேண்டுமானல் மக்கள் ஒரு சில சுகாதார விதிகளையேனும் அனுஷ்டானத்தில் கொண்டு வரவேண்டும்.

சுகாதார கதம்பநிகழ்ச்சிகள், தேகப் பயிற்சி விளையாட்டுப் போட்டிகள், சுகாதார சித்திர காட்சிகளும் நடைபெற்றன. நாவலப்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரிடாக்டர் திரு. ஏ. சுப்பிரமணியம் நன்றி கூறினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு டாக்டர் பி. இராஜசிங்கம் பரிசுகளை வழங்கினர்.

## பருத்தித்துறையில்

### சுகாதார விழா

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறையில் நடைபெற்ற சுகாதாரவாரக் கொண்டாட்டத்தில், ஆரோக்கியமான குழந்தைகள் காட்சிப்போட்டி ஒன்றும் நடைபெற்றது.

சுமார் அறுபதுக்குமதிகமான குழந்தைகள் கலந்துகொண்ட இப்போட்டியில், சுகுமாரன், தேவராசா, இராசேந்திரம் ஆகிய பெயர்களையுடைய குழந்தைகள் பரிசுக்குரியவையாக தெரிவு செய்யப்பட்டன. பரிசு பெற்றகுழந்தைகளுக்கு பட்டின சபையின் தலைவர் திரு. ந. நடராசா பரிசுகளை வழங்கினர்.

## மத்தியகல்லூரி வெற்றி

மட்டக்களப்பு, ஞாயிறு

தற்போது இங்கு ஆரம்பித்துள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் 16 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் ஆட்டத்தில் சென்ட்மைக்கேல் கல்லூரி மத்தியகல்லூரியை ஒரு இன்னிங்ஸால் தோற்கடித்தது.

மத்தியகல்லூரி மாணவர்கள் முதல் இன்னிங்ஸில் 55 ஓட்டங்களும் இரண்டாவதில் 70 ஓட்டங்களும் எடுத்தனர். செனட் மைக்கேல் மாணவர்கள் முதல் இன்னிங்சிலேயே 180 ஓட்டங்களைப் பெற்றுர்கள்.

## வேலணையில் சுகாதார விழா

வேலணை, திங்கள்

வேலணை கிராமச்சங்கத்தின் சார்பில் சுகாதாரவிழா கிராமச் சங்கத்தலைவர் திரு. ப 'கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

சுகாதார பரிசோதகர் திரு. பொன்னம்பலம் பேசுகையில் வேலணையில் சிறப்பாக சுகாதார விழாவைக் கொண்டாடுவதற்கு ஒழுங்குசெய்த கிராமச் சங்கத் தலைவரைப் பாராட்டினர்.

ஆரோக்கியமான 11 குழந்தைகளுக்கு கிராமச் சங்கத் தலைவர் பரிசுகளை வழங்கினர்.


அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

Leyden L.I.L

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது

"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

# சாவகச்சேரிக்கு ஒரு நகர மண்டபம்

## பட்டினசங்கம் தீர்மானம்

சாவகச்சேரி, ஜூன் 12

"சாவகச்சேரியில் சாராயக் கடைகள் மலிந்துவிட்டன. பொதுவாகத் தேனீர்க் கடைகள் கூடச் சாராயக்கடைகளாக மாறிவிட்டன. சாவகச்சேரியில் இருபத்திரண்டு சாராயக்கடைகள் அந்தரங்கமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றைக் ஒழித்துக்கூட்ட அதிகாரிகள் முயற்சி செய்யவில்லை. அதிக விலை கொடுத்து உபயோகமற்ற சாராயத்தை வாங்குவதிலும் பாக்க கட்டுப்பாட்டு விலையைக் கொடுத்து நல்ல சாராயம் வாங்க ஒரு தவறணையை நிறுவுவது நல்லது."

இவ்வாறு, சாவகச்சேரிப் பட்டின சங்க எல்லைக்குள் இச் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட இடத்தில் சாராயத் தவறணை ஒன்று வைப்பதற்கு அரசாங்க அதிபருக்கும், கலால் இலாகாவிற்கும் மனுச் செய்ய வேண்டும் என்று பட்டினசங்கத் தலைவர் கொண்டுவந்த பிரேரணையை ஆமோதித்துப் பேசுகையில் இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். சிவராமலிங்கம் கூறினர்.

இப் பிரேரணையை ஆதரித்து முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். சிவப்பிரகாசம், ஆறும்வட்டார அங்கத்தவர் திரு. கே. காசித்தம்பி ஆகியோரும் பேசினர்.

ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனிடமிருந்து உத்தியோக மொழியை நடைமுறையில் கொண்டுவருவது பற்றி வந்த கடிதம், சபையின் பரிசீலனைக்கு விடப்பட்டபோது இங்கு அது நடைமுறையில் அனுட்டிக்க முடியாதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

"பட்டின சங்கக் காரியாலயத்திற்கும் பொதுக்கூட்டங்களுக்கும், மற்றும் பொதுச் சேவைகளுக்கும் பயன்படக் கூடியதான ஓர் நகர மண்டபம் பழைய கிராமச்சங்க நிலத்தில் கட்டுவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டுமென்று தலைவர் திரு. எஸ். கைலாசபிள்ளை கொண்டு வந்த பிரேரணை விவாதிக்கப்பட்டது.

"பழைய மின்சார நிலையத்தைத் திருத்தியமைத்து அதில் பட்டின சங்கக் கந்தோரை நடத்துதல் உத்தமம். இப்போது காரியாலயம் வைத்திருக்கும் காணி விலைப்படப் போவதால் உடனடியாக இடமாற்றம் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும்."

ஐந்தாம் வட்டார அங்கத்தவர் திரு. பி. தம்பிப்பிள்ளை கூறியது:-

"பட்டினத்திற்கு அவசியம் வேண்டப்படுவது நகர மண்டபம். அது பட்டினத்தின் சிறந்த சின்னம். மின்சாரநிலையத்தைத் திருத்த இருபதினாயிரத்திற்கு மேல் செலவு முடியுமென்று கூறப்படுகிறது. அதைக் குறைத்துப் பட்டினசங்க மண்டபத்திற்குச் செலவு பத்தாயிரம் ரூபாய்க்கு அதிகரிக்காமல் மின்சாரநிலையத்தைத் திருத்தியமைத்து நகரமண்டபம் ஒன்றை விரைவில் அமைக்கலாமென்று தலைவர் போசனை கூறினர். சபையோர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

1962 ல் ஆதன வரி மதிப்பைப் புதிப்பிப்பதற்கு பிரதான விலை மதிப்பாளரை ஒழுங்கு செய்யவேண்டுமெனத் தலைவர் கொண்டுவந்த பிரேரணையை நாலாம் வட்டார அங்கத்தவர் திரு. பி. வீரசிங்கம் அனுமதிக்கச் சபையோர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

த

## "தெஹிசுதிய" அருந்தி இருவர் மரணம்

கொழும்பு, ஞாயிறு

'தெஹிசுதிய என்றழைக்கப்படும் சட்டவிரோதமாக உற்பத்திசெய்யப்பட்ட சாராயத்தின் நஞ்சுத் தன்மையால் ஹெந்தவ என்ற இடத்தைச் சேர்ந்த எம் ஜி. கிரா, எஸ். பி. கிரிசது ஆகிய இருவரும் மரணமானர்கள்.

ஒரே நேரத்தில் வருத்தமடைந்த இவர்கள் இருவரும், குருநாகலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுமுன்னரே இறந்தனர்.

கிராவின் மனைவியான எம். நந்தாவதி சாட்சியமளிக்கையில், பின்வருமாறு தெரிவித்தார்:-

"எனது கணவர் கிரா கிரிசதுவின் உதவியுடன் ஒரு புதிய வீடு அமைப்பதில் ஈடுபட்டார். வேலை செய்த சில மணி நேரங்களுக்குப் பின்னர், அருகிலிருக்கும் ஒரு கடைக்குச் சென்றார் என் கணவர். ஆனல், கிரிசது வேலையைத்தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். கடைக்குச் சென்ற கிரா, ஒரு போத்தல் மது பானத்துடன் திரும்பி வந்து. அதில் தண்ணீரைக்கலக்கி பின்னர் அக்கலவையில் தேசிக்காயையும், புளியையும் சேர்த்து (தெஹிசுதிய) இருவரும் அக்கலவையைக்குடித்தார்கள்.

இம் மது பானத்தை குடித்த சில மணி நேரங்களுக்குப்பின்னர் இருவரும் வாந்தியெடுத்து நோய்வாய்ப்பட்ட நிலையில் இருக்ககாணப்பட்டனர்.

இதைக் கவனித்த நான், கொய்யா மர இலைகளுடன் தேங்காயைத் துருவி, அவற்றை ஒன்ருகப் பிழிந்து அதன் சாற்றை இருவருக்கும் அருந்தக் கொடுத்தேன். இதைக் குடித்த ஒரு சில நிமிடங்களுக்குப் பின்னர் இருவரும் மயக்கமானர்கள்."

இருவரும் குருணகலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச செல்லப்பட்டனர். ஆனல் இவர்கள் அனுமதிக்கப்பட முன்னரே மரணமானர்கள்.

மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஜோர்ஜ் ஜயசிங்கி மதுவின் நஞ்சுத்தன்மையால் மரணமானர்கள் எனத் தீர்ப்பளித்தார்.

## குழந்தைகளை பிச்சைக்காரர்களுக்கு விற்கின்றனர்

கொழும்பு, ஞாயிறு

கல்யாணமாகாத பெண்களும் ஏழைத் தாய்மார்களும் தமக்குப் பிறக்கும் குழந்தைகளை பிச்சைக்காரர்களுக்கு ரூ. 5 வீதம் விற்றுவிடுவதாக தயா ஹேவாவிதாரண தர்மதுத்த சபை தெரிவித்தது.

வறுமை, குழந்தை பிறந்தவுடன் தாய் மரணமடைதல், குறைப் பிரசவம், தவருன பாதையில் சென்று கருத்தரித்தல் ஆகிய நான்கு காரணங்களினலேயே இவ்வித சீர்கேடு வளர்ந்துவருவதாக அறியப்படுகிறது.

## அமெரிக்காவில் வாழ்க்கைத்தரம்

வாஷிங்டன், ஜூன் 10

அமெரிக்காவில் 4,55,00,000 குடும்பங்கள் தலா 7000 டாலருக்குமேல் வருமானத்தைக் கொண்டிருப்பதாய் புள்ளி விபரங்கள் அறிவிக்கின்றன.

## உடுப்பிட்டி எம். பி.க்கு கார் அன்பளிப்பு

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்துக்கு மோட்டார் கார் ஒன்று அன்பளிப்பாக வழங்குவதற்கு உடுப்பிட்டித் தொகுதி மக்கள் முயற்சி செய்து வருகின்றனர்.

மோட்டார் கார் அன்பளிப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் நெல்லியடி மகாத்மா தியேட்டரில் நடைபெற்றது. விரைவில் திரு. சிவசிதம்பரத்துக்கு கார் அன்பளிப்பாக வழங்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

செவ்வாய் 13-6-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள், பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை, மாலை 5-00பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பள்ளிக்கூட நிகழ்ச்சிகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 திசை கடந்த இசை-6, 7-30 என். மாணிக்க இடைக்காடர்-பேச்சு. 7-45 ஆகாசவாணி அஞ்சல், 8-45 இஸ்லாமியநிகழ்ச்சி, 9-15 இஸ்லாமிய கீதங்கள், 10-00 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக் கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 டி. கே. வல்லபை-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 2-00 டி. கே. வல்லபை-பாட்டு, மாலை 4-45 விவிதபாரதி, (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள், இரவு 7-30 ஜி. சுப்பிரமணியபிள்ளை-பேச்சு, 7-45 சென்னை அஞ்சல், 9-15 'சொர்க்கத்தில் சந்திப்பு'-நாடகம், 9-30 மெல்லிசை 10-00 சென்னை அஞ்சல்.

# "அரசாங்க ஊழியருக்கு சோஷலிஸம் கிடையாது"

## தொழிலாளர் தலைவர் கூறுகிறர்

கட்டுநாயக்கா, ஞாயிறு

"ஒவ்வொருவரும் சோஷலிஸம்பற்றிப் பேசுகின்றபோதிலும் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில் சோஷலிஸம் இல்லை" என்று அரசாங்க சேவை தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர் திரு. பியதாசா ஆதிப்பொல இலங்கை விமானப்படைத் தொழிலாளர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"ஒரு யார் துணியின் விலை ஏன் அதிகரித்தது என்பதை அறிந்துகொள்வதற்கு அரசாங்க ஊழியர் என்ற முறையில் எங்களுக்கு உரிமையுண்டு. எங்கள் அரசியல் உணர்வின்படி நடந்துகொள்ள எங்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். ஆனல் அதே சமயம் எங்களுக்கு அரசியல் கட்சி என்ற முத்திரை குத்தக்கூடாது" என்று திரு. பியதாசா ஆதிப்பொல கூறினர்.

தொழிலாளர்கள் தங்கள் சங்கத்தின்மூலம் நியாயமான கோரிக்கைகளை விடுத்தபோதிலும் இலாகாத் தலைவர்களின் கவனக்குறைவு காரணமாக நிவாரணம் கிடைக்கவில்லையென்று திரு. பியதாசா கூறினர்.

திரு. எச். ஏ. மைத்திரிபாலா பேசுகையில் விமானப்படைத் தளத் தொழிலாளர்களுக்கு போதிய நிவாரணமளிக்கவில்லையென்றர்.

## மூன்று விவசாயப் பண்ணைகள்

### மட்டக்களப்பு தென்பகுதியில் நடைபெறும்

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு தென்பகுதியில் அக்கரைப்பற்றுக் காரியாதிகாரியின் பிரிவில் மூன்று நவீன விவசாயப் பண்ணைகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இப்பண்ணைகளில் நெற்சாகுபடி, மரக்கறிச் செய்கை, மிருகவளர்ப்பு முதலியன இடம்பெறும்.

ஒலுவில், அக்கரைப்பற்று, திருக்கோயில் ஆகிய இடங்களில் இந்தப் பண்ணைகள் அமைக்கப்படலாமெனத் தெரிகிறது.

கொழும்பு, ஞாயிறு

சீனவிலிருந்துவந்த புனித சின்னம் சுதந்திரமண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றிரவு ஆயிரக்கணக்கான மக்கள் அதைக் கண்டு களித்தனர். 330 ருத்தல் எடையுள்ள இந்தச் சின்னத்துக்கு தாமரைப்பூக்களால் அவர்கள் காணிக்கை செலுத்தினர்.


சிரநேத்திராஞ்சன தைலம்'

விடுதலையளிக்கும்போது

நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும்

வேண்டுமா ?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

மு. க. ஜெகநாதன்

யூனனி கண் நிபுணர்

பெரியகடை யாழ்ப்பாணம்

மோணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மோணரு அன் ரோஸ் பப்படங்கள்

மூவர்ண கலர் லேபிளுடன் மயில் - ரோஸ் அடையாள மிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு

# "சினிமாத் தியேட்டர்களை தேசியமயமாக்க வேண்டும்"

## சனசமூக நிலையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனத்தைப்போல் சினிமா தியேட்டர்களையும் தோட்டங்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று யாழ்ப்பாணம் ஜனசக்தி சனசமூக நிலையத்தில் நிறைவேற்றப்பட்டது.

திரு. எஸ். பூவிலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிலையப் பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சிறுபான்மைத் தமிழர்களுக்கும் கிராமசேவகர் உத்தியோகம் கோட்டா முறையில் அரசாங்கம் கொடுக்கவேண்டும்.

பாஷைப்பிரச்சினையை அரசாங்கம் தீர்ப்பதற்கு விசேஷ கமிஷனர்களை அரசாங்கம் நியமித்தமைக்குப் பாராட்டுத் தெரிவித்தல்.

தீண்டாமைச் சட்டத்தை தீவிரமாக அமுலாக்க வடபகுதியிலுள்ள இருசமூக நல்லெண்ணமுள்ளவர்களையும் தொண்டர்களாக நியமித்து வேண்டிய நடவடிக்கையெடுப்பதற்கு பொலிசாரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளுதல்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு) — மோடர்ன் (பதுளை)



பாலாஜி ★ பண்டரிபாய்
ராஜகோபால் ★ மைனுவதி
ஏ. கருணாநிதி ★ எம். சரோஜா

நடித்த

எங்கள் குலதேவி

எல்லோரும் பார்த்து மகிழ வேண்டிய ஓர் குடும்பச்சித்திரம்!

டைரக்ஷன்: ஏ. சுப்பராவ் — சங்கீதம்: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்

சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்

எம். ஜி. ராமச்சந்திரன் - பி. எஸ். சரோஜா

நடித்த

புதுமைப்பித்தன்

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30, பி. ப. 5-45க்கும் சனி, ஞாயிறு பி. ப. 2-30, 5-30க்கும்

பிரேம் நசீர் நடித்த

மந்திரவாதி

தினசரி 2-00, 3-45க்கு — சனி, ஞாயிறு 10-30க்கு

டிம்புக்டு

TIMBUKTU

(ENGLISH)


# புனித சின்னத்துக்கு மக்கள் அஞ்சலி

## விவசாய விருத்தி கூட்டுஸ்தாபனம்

கராச்சி, ஜூன் 12

இரண்டு விவசாய அபிவிருத்திக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைப்பதற்கான சட்ட நகல்களை பாகிஸ்தான் அரசாங்கம் தயாரித்துள்ளது.

## கிரிக்கட்

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை, ரேயல் விளையாட்டுக் கழகமும், இராணுவ வீரர்களும் கலந்து கொண்ட சினேக பூர்வமான கிரிக்கட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

## துன்னாலை வாலிப முன்னணி

உடுப்பிட்டி, திங்கள்

துன்னாலை வாலிப முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது திரு. சி. விநாயகமூர்த்தி தலைவராகவும் திரு. த. இராசு உபதலைவராகவும், திரு. க. மகேந்திரம் காரியதரிசியாகவும், திரு. வ. ஆனந்தராசா உப காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மார்க்கெட் விலைவாசிகள்

யாழ்ப்பாணம், சனி

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிக்கப்பட்டவிலைக்கு பொது மக்கள் காய்கறிகளை வாங்கலாம்.

| | | ரூ—ச |
|---|---|---|
| கோவா | ரூத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | " | 0 - 18 |
| கத்தரிக்காய் | " | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | " | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | " | 0 - 65 |
| காரட் | " | 0 - 75 |
| லீக்ஸ் | " | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | " | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | " | 0 - 60 |
| வெண்டைக்காய் | " | 0 - 45 |
| பொன்னாங்காணி | " | 0 - 22 |
| வல்லாரை | " | 0 - 90 |
| பூசனிக்காய் | " | 0 - 14 |
| சுத்தமானநெய்போத்தல் | | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0- 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0- 75 |
| புளி | " | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் போத்தல் | | 0 - 80 |
| எள் எண்ணெய் | " | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்நிலை) | ரூ. | 1 - 47 |

### கட்டுப்பாட்டு விலை

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 33 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 24 |
| ஸயாம் மிளகாய் | 1 - 03 |
| சின்னச் சீரகம் | 0 - 98 |
| மஞ்சள் | 0 - 57 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ரூத்தல் | 0 - 35 |

முருங்கைக்காய் 1க்கு 0 - 40 சதம். மிளகு 1 ரூத்தல் ரூ. 3 - 22. (கட்டுப்பாட்டு விலை இல்லை)

# பெண்கள் பாடசாலைகளில் ரஷ்ய முறை அணிவகுப்பு

## கல்வி மந்திரி நடவடிக்கை

கொழும்பு, திங்கள்

சகலபெண்கள்பாடசாலைகளிலும் ரஷ்ய முறையைப் பின்பற்றிய அணிவகுப்பைப் புகுத்த கல்வி மந்திரி திரு. பதியுதீன் மாமூத் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

இப் புதிய அணிவகுப்பைப் புகுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள்பற்றி தமக்கு அறிவிக்குமபடி கல்வி மந்திரி உதவிக் கல்வி ஆணையாளரிடம் கேட்டுள்ளார்.

உதவிக் கல்வி ஆணையாளரிடமிருந்து இதுபற்றிய விபரம் கிடைத்ததும் சகல பெண்கள் பாடசாலை அதிபர்களுக்கும் புது முறை அணிவகுப்புப் பற்றிய சுற்று நிருபம் ஒன்றை கல்வி மந்திரி அனுப்புவாரெனத் தெரிகிறது.

## ஆஸ்பத்திரியில் மூவர் அனுமதி

### அசிட்டிக் திராவகம் விசப்பட்டதாம்

பையாகலை, திங்கள்

'அசிட்டிக் அசிட்' வீசியதால் எரிகாயங்கள் ஏற்பட்டதாக இரண்டு பேரும் ஒரு சிறுவனும் நாகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இரண்டு சகோதரர்களுக்கிடையில் ஒரு நிலம் சம்பந்தமாக வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து கைகலப்பு ஏற்பட்டதாவும் இதில் இருவரின் உறவினர்களும் கலந்து கொண்டதாகவும் இச்சமயம் சிலர் மீது அசிட்டிக் திராவகம் வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக வெலிப்பனை பொலிசார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

## கைப்பந்தாட்டத்தில் புங்குடுதீவு வீரர் வெற்றி

வேலணை, திங்கள்

புங்குடுதீவு கோஷ்டியினருக்கும் புளியங்கூடல் கோஷ்டியினருக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான கைப்பந்தாட்டப்போட்டியில் புங்குடுதீவு வீரர்கள் இருஆட்டங்களிலும் வெற்றியீட்டினர்.

மத்தியஸ்தராக திரு. க. சண்முகநாதன் கடமையாற்றினர்.

## மஞ்சந்தொடுவாய் மாதர் சங்கம்

காத்தான்குடி, திங்கள்

"மஞ்சந்தொடுவாய் மாதர் சங்கத்தின்" ஆண்டுக்கூட்டம் திருமதி செ. அழகையா தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட செயல்திட்டங்கள் பற்றியும், சிறுகைத்தொழிலுக்கு சங்கம் உதவிய விபரங்களையும் தலைவி எடுத்துக் கூறினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி: திருமதி செ. அழகையா. உபதலைவி திருமதி த. தியாகராசா. செயலாளர் திருமதி அ. சாமித்தம்பி. பொருளாளர் திருமதி நே. தம்பியப்பா.

## புதூர் நாகதம்பிரான் கோவிற் பொங்கல்

புளியங்குளம், ஜூன் 12

புளியங்குளத்திற்குச் சமீபத்திலுள்ளதும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததுமான புதூர் நாகதம்பிரான் கோவிற் பொங்கல் சென்ற திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. இக்கோவில் 600 ஆண்டுகட்கு முற்பட்டதெனச் சொல்லப்படுகிறது.

பொங்கலன்று யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, நெடுங்கேணி, வவனியா,என்னுமிடங்களிலிருந்து இக்கோவிலுக்குப் பக்தர்கள் செல்வதற்காக விசேட பஸ்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பொங்கலன்று வவனியா வடக்குக் கிராமம் முன்னேற்றச் சங்கங்களின் ஆதரவில் கோவில் முன்றிலில் வவனியா மாவட்ட அதிபர் திரு. வணசிங்கா சுதேசிப் பொருட்காட்சி ஒன்றை ஆரம்பித்து வைத்தார். விவசாயப்பகுதியினரால் விவசாய சம்பந்தமான படங்கள் காண்பிக்கப்பெற்றன.

## இன்ஷூரன்ஸ் ஆலோசகர்

### இலங்கை வந்துசேர்ந்தார்

கொழும்பு, திங்கள்

இந்திய இன்ஷூரன்ஸ் கூட்டு ஸ்தாபன மானேஜிங் டைரக்டர் திரு. கே. ராஜகோபாலன் சென்ற சனிக்கிழமை கொழும்பு வந்துசேர்ந்தார்.

இலங்கை இன்ஷூரன்ஸ் கூட்டுஸ்தாபனத்துக்கு ஆலோசனை கூறுவதற்காக வந்துள்ள திரு. ராஜகோபாலன் இலங்கையில் இரண்டு வருடங்கள் தங்கியிருப்பார்.

திரு. ராஜகோபாலன் இரத்மலானை விமான நிலையததில் வந்திறங்கியபோது இலங்கை இன்ஷூரன்ஸ் கூட்டு ஸ்தாபனத்தின் தலைவர் ஜனாப் எம். ராஸீக் வரவேற்றார்.

## "மதப்பற்றில்லாத கட்சிகளின் மகாநாடு கூட்டுக"

புதுடில்லி, ஜூன் 12

நாட்டின் தேசிய ஒருமைப்பாடு லட்சியத்தை அடைவதற்காக, மதப்பற்றில்லாத கட்சிகளின் மகாநாட்டைக் கூட்டுமாறு பிரதமர் திரு. நேருவை வலியுறுத்தி, அகில இந்திய முஸ்லிம்கள் மகாநாடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

தேசிய ஒருமைப்பாட்டைப் பலப்படுத்துவதற்காக உத்தேச மகாநாடு, நிரந்தர போர்டொன்றை அமைக்கலாம் என்றும் யோசனை கூறியது.

தேச ஐக்கியத்துக்கு உலை வைப்பதாக வகுப்புவாதக் கட்சிகளை, தேசிய ஒருமைப்பாடு பற்றிய தீர்மானம் கண்டித்தது. சாதாரண இந்துக்களும், சாதாரண முஸ்லிம்களும் வகுப்புவாதத்தில் நம்பிக்கை வைக்கவில்லையென்றும் தீர்மானம் கூறியது.

தேசிய ஒருமைப்பாட்டையும், ஐக்கியத்தையும் வளர்ச்சியடையச் செய்வதற்காக தனிப்பட்ட முறையில், இந்துக்களும் கூட்டாக இயக்கங்களை நடத்தவேண்டும் என்று மகாநாடு யோசனை தெரிவித்தது.

## அரசியல்வாதிகள் இருவர் கொலை

கான்பூர், ஜூன் 12

வட இந்தியாவில் கான்பூர் நகரில், நர்வதபிரசாத் என்ற காங்கிரஸ் காரரும், சேகர் திவாரி என்ற சோஷலிஸ்ட் கட்சிதலைவரும் ஒரேசமயத்தில், ஒரே இடத்தில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

பொலிஸார் புலன்விசாரணை நடத்துகிறார்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.